# செந்தமிழ்

தொகுதி 89 ஜூன் 95 பகுதி 2

காலாண்டு இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ., பி.எல்.

**மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை-1.**

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் பேரறிஞர்

நா. பாலுசாமி எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பிஎச்.டி., எம்.எட்.

# பொருளடக்கம்


பக்கம்

1. திருக்குறளில் உயிரியல்
பேரறிஞர் சுப. அண்ணாமலை 1

2. புலப்பாட்டு நெறியில் மொழிச் செப்பம்
பேரறிஞர் கதிர். மகாதேவன் 6

3. காப்பியக்களங்கள்
பேரறிஞர் பழ. முத்துவீரப்பன் 10

4. சுவாமிநாதம்
பேரறிஞர் பெ. சுயம்பு 18

5. தமிழ் அகராதியில் சொற்கள் சில முடிபுகள்
பேரறிஞர் எஸ். சௌந்தரபாண்டியன் 29

6. இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்-திருக்குறள்
பேரறிஞர் இ. இராசு 33

7. நன்னூல்
க. வயித்திலிங்கம் பிள்ளை 37

# திருக்குறளில் உயிரியல்

பேரறிஞர் சுப. அண்ணாமலை

முன்னுரை

மறை என்னும் சொல் சமயத்தோரால் தத்தம் சமயத்து ஆணை நூல்களைக் குறிக்க வழங்கப்படுகின்றது. ஆயின் திருக்குறள் பொதுமறை என வழங்கப்படுதலின், அந்நூல் வாழ்க்கை பற்றிய செய்திகளைச் சமயத்தோர் கூறுவதுபோல் தத்துவச் சொல் வழக்காறுகளால் (Epistomology) எச்சமயத்தோரும் ஏற்கும் வகையில், பொதுவாகக் கூறிச் செல்வது என அறியலாம். இம் முறையை, 'உலகியல் கூறிப் பொருள் இது வென்றல்' என்று கல்லாடம் கூறும்.

திருவள்ளுவர் இறைவன், உயிர், உலகம் என்பவற்றின் இலக்கணத்தை எங்கும் வகுக்கவில்லை. யாந்தரின் இல்வாழ்க்கை, துறவு என்ற இரு நிலைகளிலும் மேற்கொள்ளற்குரிய அறங்களைக் கூற வந்த அவர், வாழ்க்கையை உயிர், உடம்பு, தத்துவம் என்று கூறுபோடாமல் முழுமையாக வைத்து ஆராய்ந்து, அந்த அறங் களின் தன்மை, தேவை, நியாயம் (Justification), பயன் ஆகிய வற்றை எடுத்துக்கூறுகின்றார். அக்கூற்றுக்களில், இலை மறை காயாக, இறை, உயிர், உலகம் என்பவை பற்றி அவர் கொண்ட கருத்துக்கள் பொதிந்துள்ளன. மேலோட்டமாகப் பார்க்கும்போது எச்சமயத்தோரும் ஏற்கும் பொதுவான வாழ்வியற் செய்தியாக அவர் கூறுபவை, ஆழ்ந்து நோக்கும் போது, அவர் உண்மை யெனக்கொண்ட கருத்துக்களைத் தம்பால் அடக்கியுள்ளன. அவ்வாறு அமைந்த குறட்பாக்களின் செய்திகளை இணைத்து நோக்கினால், இறை, உயிர், உலகம் என்பவை பற்றிய வள்ளுவரின் சிந்தனைகளைச் சிறு கோவையாகத் தொகுத்துக் கூறவும் இயலும். ஆதலின், இவ்வாய்வுக் கட்டுரை, திருவள்ளுவர் உயிர் பற்றிக் கொண்டிருக்கலாம் எனக் கருதத்தக்க கருத்துக்களை ஆய்ந்து கோவைப்படுத்த முற்படுகின்றது.

*உயிர் என்ற பொருள் உண்மை*

பௌத்தர் கொல்லாமையைத் தலைசிறந்த அறமாகக் கொள்வர். அது மறுதலையறம் ஆதலின், அதன் உடன்பாட்டறமாகிய 'உணவளித்து உயிர் ஓம்பலை' மறவாமற் கடைப்பிடிப்பர். அவரைப் போலத் திருவள்ளுவர், ''ஒன்றாக நல்லதுகொல்லாமை,'' ''நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும் கொல்லாமை சூழும் நெறி'' என மறுதலையறத்தைக் கூறி, ''பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'' என உடன்பாட்டறத்தையும் கூறுகின்றார்.

ஆயின், பௌத்தர் உயிர் என்னும் தனிமுதல் இல்லை என்பர். உடம்பும் உலகமும் கணந்தோறும் மாறிக்கொண்டேயிருக்கின்றன. இவற்றின் இடையே மாறாத உயிர் ஒன்று இல்லை என்பது அவர் கொள்கை திருவள்ளுவரும் யாக்கை நிலையாமையை விரிவாகக் கூறுகின்றார் ஆயினும் நின்றபடி நில்லாமல் சிதைவிற்கு உட்படுவது உடம்பே; உயிரன்று என்பதை ஓர் உவமையால் குறிப்பாகப் புலப்படுத்துகின்றார்.

''குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு''

என்னும் குறட்பாவில், முட்டையில் வேறுபாடு இன்றி இருந்த உயிர்க்கரு குஞ்சாக வளர்ந்தபிறகு முட்டையை உடைத்துக் கொண்டு வெளிப்படுத்துவது போல, உடம்பில் வேறுபாடு இன்றி, தனக்கென உருவம் இன்றி, இருந்த உயிர், காலம் வந்தபோது, உடம்பு சிதைய, அதை விட்டு நீங்கும் என்று கூறுகின்றார். குடம்பை சிதையும் என்று அவர் கூறவே, குஞ்சுக்கு உவமேயமான உயிர் சிதையாது என்பது குறிப்பால் பெறப்படும். காலம் வந்த போது ஓர் உடம்பிலிருந்து நீங்கிய உயிர், மற்றோர் உடம்பினுள் புகுந்து பிறப்பு அடையும் என்பதை, ''புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு'' என்ற குறட்பாவிற் கூறுகின்றார். ''எழுமை எழு பிறப்பும்'' என்னும் குறளால், உயிர்க்கு மறுபிறப்பு உண்மையை உறுதிப் படுத்துகின்றார்.

உடம்பும் உயிரும் தனித்தனிப் பொருட்கள் என்றும், அவை முறையே அழிதல் தன்மையும் அழியாத் தன்மையும் உடையவை என்றும் மேற்போந்த குறட்பாக்களில் குறிப்பாக உணர்த்தியுள்ளார்.

## உயிரின் தன்மை அல்லது குணம்

உடம்பில் அமைந்த அறிகருவிகள் மெய், வாய், கண், மூக்கு, செவி என ஐந்து. இவை தத்தம் புலனோடு-அறிவோடு-தொடர்பு கொண்டு பொருளை அறியும். ஆனால் ஒரு கருவி மற்றொன்றின் புலனோடு தொடர்புகொள்ள இயலாது. மற்றொரு கருவி என்ன அறிகின்றது என்றும் அறியவியலாது. எனவே, இது சுவை, இது மணம், இது ஒலி என வேறுபடுத்தி அறியும் ஒன்று ஐம் பொறிகளுக்கு வேறாக இருக்க வேண்டும். அது மனம் எனச் சிலரும், அறிவு எனச் சிலரும் கூறுவர்.

திருவள்ளுவர் மனமும் அறிவும் வேறு வேறு என, ''சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ நன்றியின்பால் உய்ப்பது அறிவு'' என்ற குறட்பாவில் கூறுகின்றார். ''வஞ்ச மனத்தான்'', ''நெஞ்சில் துறவார்'' ''மனத்துளது போலக் காட்டி ஒருவற்கு இனத்துளதாகும் அறிவு'' என்பவற்றால் மனத்தையும் அறிவையும் உடையான் ஒருவன் உளன் என்று புலப்படுத்துகின்றார். அந்த ஒருவனே மனம், அறிவு ஆகியவற்றைக் கொண்டு ஐம்பொறிகளின் உணர்வை வேறுபடுத்தியறிபவன் ஆதலின், ''சுவையொளி யூறோசை நாற்றம் என்றைந்தின் வகை தெரிவான் கட்டே உலகு'' என்று உரைத்தார். தெரிதல் என்ற சொல் வேறுபடுத்தியறிதல் ஆராய்தல் என்னும் பொருட்களை உடையது.

ஆராய்தலில் ஒரு வகை பயனறிதல் பொறி, புலன்களைக் கொண்டு அறிந்ததை, அப்படியே கொள்ளாமல், அதன் பயன் என்ன என்று அறிவது அறிவின் பணி என்ற கருத்தில்,

''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு''

எனக் கேள்விப் புலனின் பயன்கோடலைக் கூறுகின்றார் வள்ளுவர்.

மற்று, ஒரு பொருளைப் புலனாலும் அறிவாலும் ஆராய்ந்து அறிதல் மட்டும் போதாது; அதன் 'பொருள்-தன்மையைக்' கடந்து, அதன் உண்மையாக நிற்கும் பொருளை அறியவேண்டும் என்று, ''எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'' என்ற குறளில் கூறுகின்றார். இங்ஙனம் அறிவ தற்குப் புலனோ அறிவோ பயன்படாது. இவை பொருளைச் சார்ந்து அறியும் கருவிகள். இவற்றை ''ஐயுணர்வு'' என

உரைப்பார் திருவள்ளுவர், அதற்கு வேறாக ''மெய்யுணர்வு'' உயிருக்கு இருத்தலை. ''ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே மெய்யுணர்வில்லாதவர்க்கு'' என்ற குறட்பாவில் சுட்டிக்காட்டுகின்றார். இதில் ஐயுணர்வு எய்தப்படுவது; பொருள்களைச் சார்ந்தியறிவது என்றும், மெய்யுணர்வு உயிருக்கு இயல்பாக அமைந்து கிடப்பது என்றும் உணர்த்தியது ஒரு நயமாகும்.

இயல்பாக அமைந்து கிடக்கும் மெய்யுணர்வே உயிரின் குணம்; உயிரின் அறிவு. இது அறிகருவிகளையோ, பொருள்களையோ சாராது அறியும் ஆதலின் 'மெய்யுணர்வு' எனப்பட்டது. ஆனால் மனிதன் இங்ஙனம் சார்த்தியே அறிந்து பழகிவிடுகின்றான் ஆதலின், மெய்யுணர்வைத் தனியாக இயங்கச் செய்வதற்குச் சாதனை, அல்லது பயிற்சி செய்யவேண்டும். அதுவே தவம்' தவம் செய்து, தமக்கு இயல்பான மெய்யுணர்வைப் பெறுதலின் திருவள்ளுவர், தவம் செய்வார் தம் கருமஞ் செய்வார்'' என்றார்.

உயிருக்கு இயல்பாக உள்ள அறிவை உடம்பு, மனம்-இவற்றின் பிடியிலிருந்து விடுவிக்கவேண்டும். இவை காரணமாக உண்டாகும் ஆசை பற்று முதலியவற்றிலிருந்து விடுவித்து, தன் போக்கில் உணருமாறு செய்யவேண்டும். இது உயிருணர்வின் விழிப்பு (Self-awakening) எனப்படும். இதனை முழுமையாகப் பெறுதலைத் திருவள்ளுவர், ''தன் உயிர் தான் அறப் பெற்றானை ஏனைய மன்னுயிரெல்லாம் தொழும்'' என்ற குறளில் கூறுகின்றார்.

உயிர் உணர்வின் முதல் பணி தன்னை உணர்தலாகும். பிறகு அது இறையை உணரும். தன்னை இரக்கம் உடைய ஒன்றாக உணரும், உயிர்களின் குலத்திற்கே அன்பு வைக்கும். இறையைச் சார்ந்த 'மெய்ப்பொருளை' அறியும். அதாவது, பொருட் சார்பை விடுத்து, தற்சார்பும் இறைச்சார்பும் நாடியடையும். இதைத் திருவள்ளுவர், 'சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகுதல்' என்று கூறுவார். இரக்கமாகிய உயிரறிவை மக்கட்பண்பு என்பார், தவத்தின் ஓர் உறுப்பாக இரக்கத்தை வைத்தார். உற்றநோய் நோன்றல் என்பது மனம், உடம்பு-இவற்றின் பிடியிலிருந்து விடுபடுதல். உயிர்க்கு உறுகண் செய்யாமை என்பது இரக்கம். இவையிரண்டுமே தவம் என்றார்.

## மெய்யுணர்வின் எல்லை

மெய்ப்பொருளை அறியும் அறிவினால் மருள் நீங்கும் என்று அவர் கூறுகின்றார். ''மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு'', ''காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம் கெடக்கெடும் நோய்'' என்னும் குறட்பாக்களைக் காண்க இப்பாக்களால், காம வெகுளி மயக்கங்களுக்குக் காரணமான 'மருள்' என்ற ஒன்று, உயிரைப் பிடித்துக் கொண்டுள்ளது என்று எண்ணியுள்ளார் எனக் கொள்ளலாம்.

மற்றும், ''பிறப் பென்னும் பேதைமை'' என்றும், ''மருளானாம் மாணாப் பிறப்பு'' என்றும் அவர் கூறுதலின், மருளாகும் உயிருக்கு மறுபிறப்பு உண்டாகின்றது என்பது அவர் கருத்து என அறியலாம்.

இந்த மருள் நீங்கப் பெற்றோர் மெய்யுணர்வு துலங்கப் பெற்று, அதனால் செம் பொருளைக் காண்பர் என்று கூறுகின்றார். செம்பொருள் என்பது அடைமொழிகளில் விளக்கப்பட இயலாத பொருளாகும். இதனைப்

''பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு

என்ற குறட்பாவில் கூறுகின்றார். செம்பொருளை மற்றொரு குறளில் ''பேரா வியற்கை'' என்பார். மாறுபடாத இயற்கை யுண்மை அல்லது சத்துப்பொருள் இதுவாகும்.

உயிர் தனது அவாவை முற்றாக நீக்கினால் பிறப்பு இன்மையை-அதாவது மாறா இயற்கை உண்மையை அடையலாம் என்ற கருத்தில், ''ஆரா வியற்கை அவா நீப்பின் அந்நிலையே பேரா வியற்கை தரும்'' என்று கூறுகின்றார். செம்பொருளைக் காண்பதாகிய காட்சி வாய்க்கும் போது அதனோடு ஒன்றுதலாகிய நிலையும் உயிருக்குக் கிடைக்கும் என்று மெய்யுணர்வின் பயனைத் திருவள்ளுவர் சுட்டுகின்றார். கண்டு ஒன்றாகின்றதா, ஒன்றாகிக் காண்கிறதா என்ற ஆய்வில் அவர் புகவில்லை.

# புலப்பாட்டு நெறியில் மொழிச் செப்பம்

— பேரறிஞர் **கதிர். மகாதேவன்**

தமிழ் வரலாற்றில், இலக்கணம் முதலிடம் பெறுகிறது. ஆயின். தமிழில் உரைநடைக்கென ஓர் இலக்கண நூலின்மை குறையே ஆகும். பிற்காலத்தில் வீரமாமுனிவர் முதலியோர் சிற்சில இலக்கண நூல்கள் உரைநடை அமைப்பை விளக்கி எழுதினரேனும், அவை முழுமையானவை அல்ல; இக்காலத்தில் புது இலக்கணம் பற்றி எழுதுவோரைப் 'பாடத் திட்ட இலக்கணிகள்' எனலாம்.

மேலை நாட்டில் உரை நடைச் செப்பம் குறித்துப் பல்வகைக் கோணங்களில் ஆராயப்படுகின்றன. ஆங்கிலத்தில் புலப்பாட்டு நெறி (Rhetoric) மொழியைத் திறம்படக் கையாளும் கலைத்திறம் பற்றி விளக்குகிறது எனலாம்.

### சித்திரிக்கும் வித்தகம்

சுருங்கச் சொன்னால், நம் எண்ணங்களில் உருவாகும் கருத்துக்களைச் செப்பம் பொலியச் சித்திரிக்கும் வித்தகத்தைப் புலப்பாட்டு நெறி மூலம் தெள்ளிதின் அறிந்து கொள்ளலாம். இவ்விலக்கணத்தைத் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் அக்காலத்திற்கு ஏற்ற வகையில் சுட்டியுள்ளார். இந்நிலை உணர்ந்தன்றோ அன்று தமிழ்ப் பாண்டியன், 'எழுத்தும் சொல்லும் பெற்றும் பெற்றிலம்' என்று பொருளிலணக்கணத்தின் சிறப்பை உணர்த்தினான். முற்காலத்து மொழிச் செப்பமே புலப்பாட்டு நெறிக்கு வழிவகுக்கும் என்று எண்ணிய இலக்கணிகள் எழுத்து, சொல், பொருள் என மூவகையாகப் பிரித்தனர்.

### மூவகை மொழிச்செப்பம்

இதனையே புலப்பாட்டுத்திறனாளிகள் கருத்து (Substance), கட்டமைப்பு (Structure), நடை (Style) என மாற்றி உரைக்கின்றனர் புலப்பாட்டுத் திறனாளிகள் கூறும் இம்மூன்றும்,

இலக்கணிகள் கூறும் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றோடும் பின்னிப் பிணைந்தவை. கருத்தைப் பொருட் செப்பம் என்றும், எழுத்துச் செப்பமும் சொற்செப்பமும் கட்டமைப்புள் அடங்கும் என்றும் இவை அனைத்தும் சேர்ந்த நடைத்திறமே பொருட் செப்பம் என்றும் கூறலாம்.

செப்பமான மொழியின்றேல், புலப்பாட்டு நெறிக்கு வழி யில்லை; கருத்துச் செல்நெறி நடை பயில, மனிதனுக்கு மொழி எனும் விழி இல்லை!

## ஆய்வும் புலப்பாட்டு நெறித்தோய்வும்

இக்கட்டுரையில் ஆய்வுக்கு எத்தகைய மொழிச்செப்பம் தேவைப்படுகிறது என்பதை மட்டும் காண்போம்.

நுண்பொருள் ஆய்வும் (Micro Study),பருப்பொருள் ஆய்வும் (Macro Study) எனவரும் ஆய்வின் இரண்டு பரப்புக்களும் புலப் பாட்டு நெறியின் நோக்கினாலும் போக்கினாலும் வேறுபடுகின்றன. என்றாலும் மொழிச் செப்பத்தைப் பொறுத்தவரை ஒன்றுபடு கின்றன.

காட்டாகச் ''சிறிய பையன் பெரிய பெட்டியைத் தூக்கி னான்'' என்று எழுதுகிறோம். இலக்கணப்படி இச்சொற்றொடரில் கருத்துப் போக்கில் ஐயத்தைத் தோற்றுவிக்கின்றது. 'சிறிய' என்ற அடைமொழி எவ்வளவு சிறிய பையன்? என்ற வினாவை எழுப்பு கிறது. 'பெரிய' பெட்டி என்றால் எவ்வளவு பெரிய பெட்டி? என்ற பிறிதொரு வினாவும் எழுதுகிறது. இவ்வாக்கியத்தை எழுதுகிற வரின் நோக்கம், பையனைப் பார்க்கும் போது தூக்கிய பெட்டி பெரிதாய் இருந்தது என்று கூறுவதாகும். 'சிறிய' எனும் அடை மொழியை நீக்கிப் ''பையன் பெரிய பெட்டியைத்தூக்கினான் என்று கூறினால் மொழிச்செப்பம் தோன்ற எழுதுவதாகும். கம்பர் நெடிய தோற்றங்கொண்ட இராமனைக்காட்டவேண்டும். அதே நேரத்தில் குறுகிய தோற்றம் உடைய அகத்தியனையும் படிப்போர் கண்முன் நிறுத்தவேண்டும். 'குள்ளமான அகத்தியனை உயரமான இராமன் தொழுதான்' என்ற கருத்தமைய கணநேரத்தில் கம்பர் பாடிவிடு வார். அப்படிப் பாடினால் அகத்தியர் எவ்வளவு குட்டை? என்ற வினாஎழும். இராமன் எவ்வளவு நெட்டை என்ற பிறிதொரு வினா நிகழும். கம்பர் சொல்ல வந்த கருத்தோ இராமனை

நோக்க அகத்தியன் குள்ளமானவன் என்பதாகும். அதுமட்டுமன்றி அகத்தியன் சாதரரண உயரம் கொண்டவரை நோக்கவும் குள்ள மானவன் என்பதும் ஆம். இவ்விரு கருத்துக்களையும் விளக்கு முகத்தான், ''நின்றவனை வந்த நெடியோன் அடி பணிந்தான்'' என்றார். நின்றவனை என்ற வினையால்அணையும் பெயரால் அகத்தியனை உணர்த்தி அவனை அடி பணிந்தாலும் நெடியோன் உயரமாகக் காட்சி அளித்தான் என்று கூறும் திறம் மொழிச் செப்பத்தின் வித்தகமல்லவா! ஆய்வுக் கட்டுரையில் மொழிச்செப்பம் தோன்ற வினா எழலாம். மொழிச்செப்பம் தோன்ற அமைப்பதில் மூன்று உத்திகளை நூற்பாவாக நினைவில் கொள்ளல்வேண்டும்.

முதல் நூற்பா தண்டியலங்காரர் கூறியது ஆகும். ''செறிவு எனப்படுவது பொருள் புலப்பாடே'' செறிவு என்பதை நாம் எண்ணிய பொருளைப் புலப்பட வைக்கும் 'நுண்மை (accuracy) எனலாம். ''நுண்மை எனப்படுவது நுழைபுல வன்மையாகும்'' என்று பிறியதொரு புது நூற்பா அமைக்கலாம். இது தொடரின் கருத்து உறுதியைச் (force) சுட்டுகிறது. செறிவும் நுண்மையும் ஒரு வாக்கியத்தில் அமையும் போது தானாகவே அழகு (charm) வருகிறது. படைப்பிலக்கியம் போல் ஆய்வுக் கட்டுரையில் அழகு ஊட்ட, அணி சேர்க்க வேண்டா. அணி சேர்க்கும் போது மிகை தோன்றும்; மிகைப்பட எழுதுவது ஆய்விற்கு அழகாகாது.

ஒரு கருத்து எழுதப்படுமேல் அக்கருத்து எதற்காக (purpose) எழுதப்படுகிறது என்பதும், யாருக்காக (audience) எழுதப்படு கிறது என்பதும் மனத்துள் இருத்தி எழுதுதல் பொருட்செப்பம் மேம்பட வழிவகுக்கும்.

என்ன எழுதுகிறாய்? என்று பார்ப்பதைவிட எப்படி எழுதுகிறாய்? என்று காண்பது அதர்ப்பட நெறி காட்டும் பொரு ளுக்குச் செப்பம் நல்குகிறது.

மொழியின் ஆற்றல்

எல்லா மொழிகளுக்கும் மூவகை ஆற்றல் உண்டு; மொழிக்கு இயற்கையாகக் காணப்படும் இந்த ஆற்றல் மொழியைக்கருத்துப் புலப்பாட்டிற்குப் பயன்படுத்துவோராலேயே சிறக்கிறது.

மொழியின் மூவகை ஆற்றல்களைப் பின்வரும் முறையில் விளக்கம் தரலாம்.

| தெரிவித்தல் Expression | <—> | பதிவித்தல் (inpression) | <—> | மறைத்தல் (Suppression) |
|---|---|---|---|---|
| \| | | \| | | \| |
| செம்மை (accuracy) | | வன்மை (force) | | அழகு (charm) |

தெரிவித்தல், பதிவித்தல் ஆகியவை ஆய்வியல் கட்டுரைகளில் பெரிதும் பயன்படும் உத்திகள் ஆகும். மறைத்தல் எனும் மொழி ஆற்றல் செறிவான கருத்துக்களை உருவத்தின் உள்ளீடாய்க் கட்டுதல் எனும் வகையில் படைப்பிலக்கியத்தில் சிறப்பாய்ப் பயன்படுகிறது.

'தெரிவித்தல்' என்பது கருத்துச் செம்மையைக் காட்டுதல் ஆகும். ஆய்வுக் கட்டுரையில் மொழி காட்டும் இலக்கணம் எனல் தகும். ஆய்வுக் கட்டுரையின் மொழிச் செப்பத்தில் என்ன கருத்தினைத் தெரிவிக்கிறோம் என்பதைவிட எப்படித் தெரிவிக் கிறோம் என்பதே இன்றியமையாததாகும் என முன்னர்க் கண் டோம்.

*தெரிவித்தல் என்பது என்ன?*

தெரிவித்தல் பதிவித்தல் ஆகும். ஒரு கருத்தை நாம் எழுத்து மூலம் தெரிவித்தால், அதே பொருளில் படிப்பவர் கருத்தில் அது பதிய வேண்டும்.

பேசுவது போல எழுதுவதில் எழுத்துத்திறனோ கருத்துத் திறனோ இருக்க முடியாது. ஒருவர் ஒன்றினை விளக்குவதற்காகச் சொல்லுகிற கருத்து அதனைப் படிக்கிறவனுக்குச் சென்று சேர்கிறதா என்று பார்த்தல்வேண்டும்.

மொழிச் செப்பத்தில் தெரிவிக்கும் ஆற்றலும் தெரிவிக்கும் ஆற்றலில் பிறர் மனத்தில் பதிவிக்கும் ஆற்றலும் உண்டென ஒருவாறு அறியலாம்.

எனவே, ஆய்வுக் கட்டுரையில் கருத்தைத் தெரிவித்தலும் பதிவித்திலும் கருத்தைக் காட்டுதலினால் சிறப்படைகிறது.

# காப்பியக் களங்கள்

பேரறிஞர் பழ.முத்துவீரப்பன்

## இராமனும் அனுமனும் :

கம்பனின் காப்பியம் பலநூறு கோபுரங்கள் கொண்ட கலைக் கோயில். அங்கே சிந்தை கவரும்மந்திரப் பாத்திரங்கள் பலவாகும். 'கம்பனின் பாத்திரங்கள் காலத்தின் சாத்திரங்கள்' என வியப்பார் கண்ணதாசன். பாத்திர இயக்கம் படிப்பவரைப் பரவசப்படுத்தும்; பக்குவப்படுத்தும். கம்பனின் காவியத்தில் இராமனுக்கு இணையாக ஒரு பாத்திரமாகப் படைக்கப்பட்டிருப்பவன் அனுமன். ஆண்டவனுக்குள்ள சிறப்பு அடியார்க்கும் உரியது என்பதைக் காட்ட எண்ணித்தான் போலும் கம்பன் இவ்வாறு படைத்திருக்கிறான். இக்கருத்தைச் சில சான்றுகள் கொண்டு விளக்க முற்படுகிறது இக்கட்டுரை.

## அனுமனின் பெருமை :

'தன் பெருமை தானறியாத் தன்மையன்' என்ற வாசகத்திற்கு இலக்கியமாகத் திகழ்பவன் அனுமன். அவன் சொல்லின் செல்வன். சூழ்நிலைக்கேற்பப் பேசுபவன்; இராம நாமத்தின் மீது அளப்பரிய நம்பிக்கை கொண்டவன். எத்தகைய பெருவெற்றி பெற்ற நிலையிலும் தன்னடக்கம் காட்டுபவன். புலனடக்கத்தில் தன்னிகரற்றவன். 'தன் பெருங் குணத்தால் தன்னைத் தான் அலாது ஒப்பு இலாதான்' (3759) என்றும் 'தன்னின் நேர் பிறர் தான் அலாது இல்லவன்' (7503) என்றும் கவிஞனால் பாராட்டப் பெறுபவன்.

## காப்பியக் கட்டுமானம் :

'தலைமைப் பாத்திரத்திற்கு அமைக்கும் பல களங்களைத் தலைமையிலிகளுக்கு அமைக்கக் கூடாது என்பார் செம்மல் வ. சுப. மாணிக்கனார். எடுத்துக்காட்டாக, இராமனின் விரக தாபத்தை விவரித்துப் பாடும் கம்பன், இலக்குவனின் பிரிவுத்

துயரைப் பேசாதிருப்பதையும், இந்திரசித்து இறப்பின் போது மண்டோதரி புலம்புவதை மனமுருகச் சித்திரிப்பவன் அட்சனின் இறப்பின்போது வறிதே சுட்டிச் செல்வதையும் எடுத்துக்காட்டு வார் அவர். காப்பியக்கட்டுமானத்திற்கு இது இன்றியமையாதது. எல்லா நிகழ்வுகளையும் எல்லாப் பாத்திரங்களையும் ஒத்த நிலையில் பேசுவது என்பது கூடாது; பொருந்தாது. ஆனால் இராமனுக்கு அமைத்த களங்களுக்கு ஓரளவு நிகரான களங்களை அனுமனுக்கும் அமைந்திருப்பதன் மூலம் காவிய நாயகனுக்கு இணையான ஒரு பாத்திரமாக அவனைக் கருதுகிறான் கம்பன் என்பது புலப்படும்.

படல ஒற்றுமை :

உயுத்த காண்டத்தில் முதற்போர்புரிபடலம், படைத்தலைவர் வதைப்படலம், மகரக்கண்ணன் வதைப்படலம், மூலபல வதைப் படலம், கும்பகர்ணன் வதைப்படலம் என இராமனுக்கு அமைக் பட்ட படலங்களுக்கு நிகராகச் சுந்தரகாண்டத்தில் பொழில் இறுத்த படலம், சிங்கரர் வதைப்படலம், சம்பு மாலி வதைப்படலம், பஞ்ச சேனாபதி வதைப்படலம், அக்ககுமாரன் வதைப்படலம் என அனுமனுக்கும் அமைத்து அவனது தனிப்பெரும் வீரத்தைச் சுட்டி யிருக்கிறான் கம்பன்.

நிகழ்ச்சி ஒற்றுமை ;

அன்பின் வடிவமான குகன் இராமனுக்குத் தேனும் மீனும் தந்து உண்ணும்படி பணிந்து வேண்டுகிறான். அப்போது இராமன்

அரிய தாம் உவப்ப உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்திஅன்றே
பரிவினின் தழீஇய என்னின் பவித்திரம், எம்மனோர்க்கு
உரியன; இன்தீன்நாமும் உண்டனெம் அன்றோ-
என்றாள் (1967)

இவ்வாறே கடல்தாவு படலத்தில் அனுமனிடம் 'இற்றே, இறை எய்தினை ஏய்ந்தது கோடி என்னால்' என மைந்நாக மலை வேண்டும் போது 'பெருந்தேன் பிழிசாறும் நின் அன்பு பிணித்த போதே இருந்தேன் நுகர்ந்தேன் இதன்மேல் இனி ஈவது என்னவோ? (4799)

என விடையிருக்கிறான் அனுமன். உண்மை அன்பைப் பெரு மைப்படுத்தும் வகையில் இருவரின் விடையும் ஒத்த தன்மையில் அமைந்துள்ளது.

தாடகையோடு போரிடும் நிலையில் அவள் எவ்வளவு பலம் பெற்றவளாயினும் 'பெண் அல்லவா' என்ற எண்ணம் இராமன் மனத்தில் எழுகிறது. இவ்வாறே இலங்காதேவியோடு போரிடும் நிலையில் அனுமனும் கருதுவதாகக் கம்பன் அமைத்துள்ளான்.

பெண் என மனத்திடைப் பெருந்தகை நினைந்தான். (374)

என்னே! பெண் இவள்! சொல்லின் பிழை என்னா
ஒடியா நெஞ்சத்து ஓர் அடிகொண்டான் (4925)

முதற்போரில் இராமனிடம் தோற்று மகுடம் இழந்து இராவணன் நாணி நிற்கிறான் அப்போது 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' (7271) என அருள் புரிகிறான் இராமன். இவ்வாறே, உடன் வந்தோர் அனைவரும் இறக்கத் தனித்து நின்ற சம்புமாலியிடம் கருணை கொண்ட நிலையில்

'எளியோர் உயிர் கோடல்
நீதி அன்றால்! உடன் வந்தாரைக் காக்கும் நிலை இல்லாய்!
சாதி அன்றேல் பிறிது என் செய்தி! அவர் பின் தனி நின்றாய்
போதி......'எனக்கருணை காட்டுகிறான், அனுமன்.

இராமனோடு போரிடக் கும்பகர்ணனை அனுப்புகிறான் இராவணன். அப்போது சீதையைச் சிறைவிடுத்து இராமனின் திருவடி பணியுமாறு அறிவுரை கூறுகிறான் கும்பகர்ணன். இதனால் இராவணன் வெகுண்டு பேசும் போது,

'வென்று இவண் வருவென் என்று உரைக்கிலேன்; விதி
நின்றது; பீடர் பிடித்து உந்த நின்றது'
பொன்றுவென்; பொன்றினால் பொலன் கொள் தோளியை
நன்று' என நாயக விடுதி (7366) என்று கூறிச் செல்கிறான் கும்பகர்ணன். இவ்வாறே அனுமனோடு போரிடச் செல்லும் நிலையில், கிங்கரர், சம்புமாலி, பஞ்சசேனாபதிகள் ஆகியோரை உடன் சென்ற அத்துணைபேரோடும் கொன்றொழித்த அனுமனின் ஆற்றலை வியந்து பாராட்டும் வீரர் வீரனான இந்திரசித்து,

அக்கனைக் கொன்றுதின்ற குரங்கினை ஆற்றல் காண்டி;
புக்குஇனி வென்றும் என்றால் புலம்பு அன்றிப்புலமைத்து
ஆமே (5727)

எனப் பேசுகிறான். இவ்வாறு இராம, அனுமரின் வரம்பில் ஆற்றல் பஙகவர்களுள் பெருவீரர்களால் பாராட்டப்பட்டுள்ளது.

பொழில் இறுத்த படலத்தில் இராவணனிடம் அனுமனின் பேராற்றல் குறித்துப் பேசும் காவலர்,

'புலவர் போற்றும் மூவரின் ஒருவன் என்று புகல்கினும் முடிவு ஏவம்' (5487) என்று குறிப்பிடுகின்றனர். இவ்வாறே இறுதிப் போரில் தான் எறிந்த சூலப்படையும் இராமனின் பேராற்றலால் அழிந்த நிலையில்

சிவனோ அல்லன், நான்முகன் அல்லன், திருமாலாம்
அவனோ அல்லன்; மெய்வரம் எல்லாம் அடுகின்றான்
தவனோ என்னின் செய்து முடிக்கும் தரன் அல்லன்
இவனோ தான் அவ்வேத முதற் காரணம் என்றான் (9837)

என எண்ணுகிறான் இராவணன். இராமனையும் அனுமனையும் மூலப்பரம் பொருள் என்றே இராவணனும் காவலரும் கருதுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இறக்கும் நிலையில் இராமனிடம் வரம்கேட்கும் கும்பகர்ணன் 'உம்பியைத்தான் உன்னைத்தான் அனுமனைத்தான் ஒருபொழுதும் எம்பி பிரியானாக அருளுதி' (762) என வேண்டுகிறான். இவ் வேண்டுதலில் கூட இராமனுக்கு நிகரான பெருமை அனுமனுக்கு அளிக்கப்பட்டிருப்பது கருதத்தக்கது.

**உவமையிலும் ஒற்றுமை :**

அனுமனோடு பல இடங்களில் இராமனையும் அவன் புகழையும் அவன் பெற்ற வெற்றியையும் ஒப்பிட்டுப் பேசுகிறான் கம்பன். திருமால் அவதாரங்களோடு இராமனை ஒப்பிடுவது போல அனுமனும் ஒப்பிடப்படுகிறான். சில எடுத்துக்காட்டுகள் காணலாம்,

இலங்கையில் அனுமன் உலவும் நிலையைக் குறிப்பிடும் போது,

'எளி உறையும் ஒழியாமல் யாண்டையுளும் உளனாய் தன்
உள் உறையும் ஒருவனைப் போல் எம் மருங்கும் உலவுவான்
(5608)

'காலின் தோன்றல்
கரியனாய் வெளியனாய் செய்யனாய் காட்டும்-காண்டற்கு
அரியனாய் எளியனாய் தன அகத்து உறை அழகனே போல்'
(4936) என இராமனோடு ஒப்பிடப்படுகிறான்.

இந்திரசித்தனின் கணைகள் தன் சிரத்திலும் மார்பிலும் அழுத்தும் நிலையில் அனுமன் கலங்காமல் நிமிர்ந்து நின்ற தோற்றத்தை 'இராமனின் புகழுக்கு ஒப்பிடுகிறான் கவிஞன். தளர்ச்சி அடையாமல் தனியாண்மை காட்டும் அனுமனின் நிமிர்ந்த தோற்றத்திற்கு வேறு உவமை கூடச் சொல்லியிருக்கலாம். ஆனால், இராமனுக்கு நிகராக அனுமனைப் படைத்துக்காட்டும் நிலையில்

'மறியும் வெண்திரை மரகடல் உலகுஎலாம் வழங்கி
சிறியதாய் சொன்ன திருமொழி சென்னியில் ஆடி
நெறியில் நின்று தன் நாயகன் புகழ் என நிமிர்ந்தான்'

(5782) என்கிறான் கம்பன்.

இராகவன் புகழ் எனும் நலத்தான் (4967)
இராகவன் சரம் எனப் புகழோன் (4968)

என்றினைய பாராட்டுகளையும் எண்ணிப்பார்க்கலாம்.

கும்பகர்ணன் களத்தில் இட்ட தண்டைக் கொண்டு போரிடும் அனுமன்.

'எங்கும் உளன் ஒருவன்' என இருநான் மறை தெரிக்கும்
'செங்கண்ணன் இவனே' எனத் திரிந்தான். (8555)

என்றும்,

'உலகு ஒரு மூன்றையும் வலத்தால்
அளந்தாலும் முன் இவனே' என இமையோர்களும்
ஆயிர்த்தார் (8556)

என்றும் திருமாலோடு ஒப்பிட்டுப் பேசப்படுகிறான். இவ்வாறே பிலம்புக்கு நீங்கும் நிலையில் அனுமனின் பேருருக்கொண்ட நிலையை, 'உலகு எடுத்த கருமாவினையும் ஒத்தான்' (4589) எனப்புனைகிறான் கம்பன்.

மூவடி குறித்து முறை ஈர்அடி முடித்தான்
பூவடிவுடைய பொருஇல் சேவடி புரைந்தான் (4590)
(9035) (8733)

என அனுமன் திருமால் அவதாரத்தோடு ஒப்பிடப்பெறுவதுபோல இராமனும் 'அண்டத்தினை அளந்தான் எனக் கிளர்ந்தான்' (9445) எனப் போற்றப்படுகிறான்.

அசோக வனத்தை அழித்து நின்ற நிலையில் அனுமன் மும்மூர்த்திகளோடும் ஒப்பிடப்பெறுகிறான். (5474)

கும்பகர்ணன் சுக்கிரிவன் மேல் எறிந்த சூலத்தை அனுமன் உடைத்தான். அப்போது எழுந்த பேரொலி இராமன் வில் முறித்த போது எழுந்த ஓசையை ஒத்தது என்கிறான் கவிஞன்.

சித்திர வனமுலைச் சீதை செவ்வியால்
முத்தனார் மிதிலை ஊர அழிவு முற்றிய
பித்தன் வெஞ்சிலையினை இறுத்த பேர்ஒலி
ஒத்தது சூலம் அன்று இற்ற ஓசையே (7582)

இராவணன் மகுடத்தின் மீது இராமன் சரம் தொடுக்கிறான். அச்சரம் சூரியன் மேல் பாய்ந்த அனுமனின் வேகத்திற்கு நிகராகச் சென்று மகுடத்தை வீழ்த்துகிறது என்கிறான் கம்பன்.

'மின்னும் பல்மணி மவுலிமேல் ஒருகணை விட்டான்;
அன்ன காய்கதிர் இரவிமேல் பாய்ந்த போர் அனுமன்
என்னல் ஆயது ஓர் விசையினின் சென்று அவன் தலையில்
பொன்னின் மா மணி மகுடத்தைப் புணரியில் வீழ்த்த (7260)

என்பது பாடல் இவ்வாறே மீட்சிப்படலத்தில் பரதன்பாற் செல்லும் அனுமனின் வேகம், தந்தை வேகமும், தனது நாயகன் தனிச் சிலையில் முந்து சாயகக் கடுமையும் பிற்பட முடுகி சிந்தை பின் வரச் செல்பவன் (10152) எனப்பாராட்டப் பெறுகிறது.

இராமனின் அம்பினால் கடல் தீப்பற்றி எரிந்தது. அப்போது இலங்கை. மீளப்போன தூதுவன் வந்தான் எனத் துணுக்குற்றது என வருணிக்கப்படுகிறது (6634)

இவ்வாறு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இராம னோடும், அவன் புகழோடும் அவதாரச் செயல்களோடும் ஒப்பிடப் படுகிறான் அனுமன். இவ்வண்ணமே அனுமன் செயல்களோடு இராமன் செயல்களும் ஒப்பிடப்படுகின்றன.

கடல்தாவ அனுமன் பேருருக்கொண்ட நிலையைப் போற் றும் போது,

பொருஅரு வேலைதாவும் புந்தியான், 'புவனம் தாய
பெருவடிவு உயர்ந்த மாயோன் மேக்குறப் பெயர்ந்த
தாள் போல்
உருஅறி வடிவின் உம்பர் ஓங்கினான், உவமையால்

திருவடி என்னும் தன்மை யாவர்க்கும் தெரிய நின்றான் (4736) என வைணவ சம்பிரதாயப்படி புகழப்படுகிறான்.

அரியின் பெருமையை அவன் அடியாரும் பெறுவர் என் சம்புமாலி வதைப்படலத்தில்,

அண்ணல், அவ் அரியினுக்கு அடியினர் அவன்சீர்
நண்ணுவர் எனும் பொருள் நவைஅறத் தெரிப்பான்
மண்ணினும் விசும்பினும் மருங்கினும் வலித்தார்

கண்ணினும் மனத்தினும் தனித்தனி கலந்தான் (5585)

என அனுமனின் போராற்றலைப் புனையும் நிலையில் சுட்டுகிறான் கவிஞன்.

பிராட்டியின் பாராட்டு :

சிறையிருக்கும் செல்வி
அம்மைஆய் அப்பன் ஆய அக்கனே! அருளின் வாழ்வே
இம்மையே மறுமைதானும் நல்கினை இசையோடு என்றான் (5298)

என்று பாராட்டுகிறாள். மீட்சி பெறும் காலத்தில் 'நின்னை என் தலையினால் தொழவும் தகும் (9979) என்று நெகிழ்கிறாள். திரிசடை நீங்கிய அரக்கிமார்களைத் தண்டிக்க வரம் கேட்கும் அனுமனிடம் 'எனக்கு நீ அருள் இவ்வரம் கேட்கும் அனுமனிடம் 'எனக்கு நீ அருள் இவ்வரம் அரக்கிமர் மனக்கு நோய் செயல் தவிர்க' என்று தான் அவனிடம் வரம் வேண்டுகிறாள். 'செவிக்குத் தேன் என இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகன்' எனக் கம்பனே போற்றுவது போல, ஆழிநெடுந்தகை ஆண்தகை தன் அருளும்புகழும் அழிவு இன்றி ஊழிபலவும் நிலை நிறுத்தற்கு ஒருவன் நீயே உளை ஆனாய்' எனப்பாராட்டு கிறாள்.

இராமனின் பாராட்டு :

சொல்வின் செல்வனை 'ஆணி இவ் உலகுக்கு எல்லாம், என்றும் நாட்படா மறைகளாலும் நவைபடா ஞானத்தாலும் கோட்படாப்பதம் என்றும் அனுமனின் பேச்சைக் கேட்ட மாத்தி ரத்தில் பாராட்டுகிறான் இராமன்.

வேல் ஏற்ற படலத்தில் இலக்குவன் உள்ளிட்ட அனைவரை யும் மருந்து மலையைக் கொண்டு வந்து உயிர்ப்பிக்கின்றான்

அனுமன். அப்போது இராமன், 'பெற்றனன் உன்னை, என்னை பெறாதனை பெரியோய்' என்று போற்றிப் பாராட்டுகிறான்.

மூல பல வதைப்படலத்தில் 'ஐய நிற்கு இயலாது உண்டோ?' (9362) என்றும் 'வீரர்க்கும் வீர' (9363) என்றும் சிறப்பிக்கிறான்.

எல்லாவற்றுக்கும் மேலாக விடைகொடுத்த படலத்தில் நீ செய்த பேருதவிக்கு நான் செய்யும் கைம்மாறு பிரிதில்லை என்று உணர்ச்சி பொங்கக்கூறி, தான் அவனைத் தழுவாமல் தன்னைத் தழுவுமாறு அவனை வேண்டுகிறான் இராமன்.

'மாருதி தன்னை ஐயன் மகிழ்ந்து இனிது அருளின் நோக்கி
ஆர் உதவிடுதற்கு ஒத்தார் நீ அலால்? அன்று செய்த
பேர் உதவிக்கு யான்செய் செயல் பிறிது இல்லை பைம்பூண்
போர் உதவிய திண் தோளாய் பொருந்துறப் புல்லுக'

என்றான் (10351). இதன் சிறப்பை 'அனுமனுக்கு மட்டும் தருகிறான் இராகவன். அனுமனுக்கு அந்தம் ஒன்றில்லா ஆனந்தத்தைத் தரவேண்டும் என்று நினைக்கிறான் பெருமான். தன்னையே அவனுக்கு தருவதன் மூலம் இதனைச் செய்கிறான். மேலும் தழுவிக்கொள்வதிலும் ஒரு நியதி உண்டு. தழுவுகின்றவன் உயர்ந்தவன் என்றும் தழுவப்பெற்றவன் ஒருபடி இறக்கம் என்றும் கூறும் மரபு உண்டு. இராமன் அனுமனைத் தழுவினால் இராமன் ஒரு படி உயர்ந்தவனாகவும் அனுமன் ஒரு படி இறக்கமாகவும் கொள்ள இடம் உண்டு. ஆனால் இப்பொழுது இராகவன் அதனை ஒழிக்க விரும்பி அனுமனை நோக்கி 'ஐயா' பொருந்துறப் புல்லுக' ('நீ என்னை வந்து தழுவிக்கொள்வாயாக') என்று பேசுகிறான் என விளக்குவர் அ. ச. ஞானசம்பந்தன். (கம்பன் புதிய பார்வை பக்கம் : 332-334)

இவ்வாறு பிராட்டியாலும் பெருமானாலும் போற்றப்படு வனை இராகவன் புகழைத்திருத்தும் கவிக்கு நாயகனைப் பல்வேறு நிலைகளில் இராமனுக்கு இணையாகவே பேசுகிறது கம்பனின் காவியம்.

# சுவாமி நாதம்

—பேரறிஞர் பெ. சுயம்பு

**முகவுரை :**

சுவாமிநாதம் ஆக்கியோன் பெயரைக் கொண்ட ஐந்திலக்கண நூல். இதனை ஆக்கியவர் சுவாமி கவிராசர்; திருநெல்வேலி மாவட்டத்துக் கல்லிடைக்குறிச்சியில் வாழ்ந்தவர்; பொதிகை நிகண்டை இயற்றியவரும் இந்நூலுக்குச் சிறப்புப்பாயிரம் பாடியவருமான சிவசுப்பிரமணியனின் தந்தை. நூலாசிரியரின் காலம் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி.

**நூலமைப்பு**

சுவாமிநாதம் ஐந்து அதிகாரங்களை உடையது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், யாப்பதிகாரம், அணியதிகாரம் என்பன முறையே எழுத்து முதலாய இலக்கணங்கள் ஐந்தனையும் விவரிக்கின்றன.

ஒவ்வோர் அதிகாரமும் 'மரபு' எனும் பெயருடைய உட்பிரிவுகள் மூன்றினை உடையது.

நூலின் தொடக்கமாக விநாயகப் பெருமானை வணங்கும் காப்புச் செய்யுள் வெண்பாவாக உளது. ஏனைய செய்யுள்கள் யாவும் ஆசிரிய விருத்தத்தால் அமைந்துள்ளன. இந்நூலில் 202 பாக்கள் உள்ளன.

நூலின் தொடக்கப் பகுதியாகக் கடவுள் வாழ்த்தும் சிறப்புப் பாயிரமும் அமைய, அவற்றை நூல்வழி எனும் பகுதி தொடர்கின்றது. சிறப்புப் பாயிரம் நூலாசிரியர் பற்றிய சிறு குறிப்பினையும் சிறப்புப்பாயிரத்தை எழுதியவர் பற்றிய குறிப்பினையும் தருகின்றது. நூல், பாயிரம், ஆசிரியர், மாணாக்கர், கற்பித்தல், கற்றல் ஆகிய இலக்கணங்களை நூல்வழி எனும் பகுதி கூறுகின்றது. நூல்வழி தரும் செய்திகள் நன்னூல் முதலிய நூல்களில் கூறப்பெற்றவையே;

எனினும் நூல்வழி எனும் பெயர் புதியது.[1] நூலுக்கு வேண்டுவன, வேண்டாதன எனும் தகுதிகளை எடுத்துரைக்கும் வழியாக இப் பகுதி அமைவதால், இப்பெயரை அமைத்துள்ளார் எனலாம்.

நூலின் அமைப்பினைப் பின்வருமாறு வரையலாம்

சுவாமி நாதம்

1 கடவுள் வாழ்த்து
2 சிறப்புப் பாயிரம்
(3-12) நூல்வழி
(13-202) 190 விருத்தங்கள்

| எழுத்து | சொல் | பொருள் | யாப்பு | அணி |
|---|---|---|---|---|
| (13- 3) | (34:70) | (71-151) | (152-178) | (179-202) |

எழுத்து

| எழுத்தாக்கமரபு | பதமரபு | புணர்ச்சிமரபு |
|---|---|---|
| (13-22) | (23-26) | (28-33) |

சொல்

| பெயர்மரபு | வினைமரபு | எச்சமரபு |
|---|---|---|
| (34-46) | (47-53) | (54-70) |

பொருள்

| அகத்திணைமரபு | கைக்கோள்மரபு | புறத்திணைமரபு |
|---|---|---|
| (71-84) | (85-128) | (126-151) |

யாப்பு

| உறுப்புமரபு | பாவினமரபு | பிரபந்தமரபு |
|---|---|---|
| (152-155) | (156-161) | (162-178) |

அணி

| பொருளணிமரபு | சொல்லணிமரபு | அமைதிமரபு |
|---|---|---|
| ( 179-193) | (194-201) | (202) |

தமிழ் இலக்கணச் சுருக்கம்

இந்நூலின் தோற்றத்திற்கான காரணத்தைச் சிறப்புப் பாயிரம் ஓரளவு சுட்டுகின்றது.

''முன்னூல் வழியாய்மெய் யநித்தநூல்விரி வென்று
அஞ்சுமலர் உணர்ந்துபயன் நூலுணர்ஏ துவினான்''
(சிறப்புப்பாயிரம்)

சுவாமிநாதம் ஒரு வழிநூலே என்பதும் முந்தைய நூல்கள் செய்திகளை விரிவாகக் கூற, இந்நூல் சுருக்கமாக விளக்குகின்றது என்பதும் மேற்சுட்டிய சிறப்புப்பாயிரம் வரிகளின் கருத்தாகும்.

நூலாசிரியரும் ஐந்து இலக்கணங்களின் விரிவான செய்திகளை இந்நூல் சுருக்கி விளக்குகின்றது என்பதைச் சுட்டுகின்றார்.

''செப்பெழுத்துச் சொற்பொருள்யாப் பலங்காரம் எனுமைந்
தமிழ்தினிலக்[2] கணவிரிவை ஒவ்வொருமூன் றியலாய்
அடக்கிமொழி குவன்சுவாமி நாதமிந்நூற் பெயரே'' (13)

சுருக்கி என்பதை ஆசிரியர் 'அடக்கி' என்ற சொல்லால் குறிப்பிடுதல் சிறப்பானது. இங்கு முன்னூல்கள் விரித்துரைத்த பொருள்கள்யாவும் விடுதலின்றி அடக்கி எனும் கருத்தும் வெளிப்படுகின்றது.

நேமிநாதம் எழுத்து, சொல் எனும் ஈரிலக்கணங்களை மட்டும் சுருக்கி உரைக்கும் நூலாகும். வீரசோழியம் ஐந்திலக்கணங்களையும் சுருக்கி உரைத்தாலும், வடமொழியின் தழுவல் அந்நூலில் மிகுதியாக இடம்பெற்றுளது. எனவே தமிழ்மரபைத் தழுவி ஐந்திலக்கணங்களையும் சுருக்கிக் கூறும் நூல்தேவை என்று கருதி, ஆசிரியர் சுவாமிநாதத்தை இயற்றினார் எனக் கொள்ளலாம்.

பெரும் பிரிவு ஏனைய நூல்களைப் போலவே அதிகாரம் என்ற பெயரை இந்நூலிலும் பெற்றுளது. ஆனால் உட்பிரிவுயாவும் மரபு என்ற பெயரைப் பெற்றிருத்தல் இந்நூற்கே உரிய தனியியல்பாகும். மரபு எனும் பெயரை உட்பிரிவுக்குச் சூட்டுதல் தொல்காப்பியத்திலும் நேமிநாதத்திலும் மேற்கொள்ளப்பட்ட நெறியே. எனினும் அந்நூல்களில் எல்லா உட்பிரிவுகளும் 'மரபு' என்று குறிப்பிடப்படவில்லை, முந்தைய தமிழ் இலக்கண மரபுகளை எஞ்சாது பேணும் நூலிது என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் வகையில் சுவாமிநாதம் அனைத்து உட்பிரிவுகளுக்கும் 'மரபு' என்ற பெயரைச் சூட்டியுள்ளது.

ஒவ்வோர் அதிகாரமும் மூன்று மரபுகளாகப் பகுத்துக் கூறுதல் இந்நூலில் மட்டுமே காணப்படும் விளக்க நெறியாகும்.

### எழுத்திலக்கணம்

எழுத்ததிகாரத்தின் முதலாம் இயலான எழுத்தாக்க மரபு நன்னூல், இலக்கணவிளக்கம் ஆகியவற்றின் எழுத்தியல் செய்திகளைக் கொண்டுளது. இரண்டாம் இயலாகிய பதமரபு உருபனியல் செய்திகளைக் கூறுகின்றது. ஒரு சொல்லின் உறுப்பாகப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் எனும் ஆறனையும் இந்நூலும் முந்தைய நூல்களைப் போன்று கூறுகின்றது. இவற்றுள் சந்தி, விகாரம் ஆகிய இரண்டும் புணர்ச்சியில் கூறத்தக்கவை; எனினும் முந்தைய நூல்களின் மரபை வழிமொழியும் நோக்கால் இந்நூலும் அவற்றைப் பதமரபில் கூறுகின்றது. நன்னூல் பதவியலின் இறுதியில் வடமொழியின் ஒலிகளைத் தமிழில் ஆளும் விதமாகிய ஒலித்திரிபுகளைக் கூறுகின்றது. தமிழ் மொழிக்கு மட்டுமே இலக்கணம் கூறும் நோக்கம் உடைய இலக்கண விளக்கத்தில் இச்செய்தி இடம் பெறவில்லை. ஆனால் இச்செய்தி சுவாமிநாதத்தில் புணர்ச்சி மரபின் இறுதியில் கூறப்பட்டுளது. இத்தகைய அணுகுமுறை புதியதும் அறிவியலார்ந்ததுமாகும்.

புணர்ச்சிக் கருத்துகள் யாவும் சுருக்கப்பட்டுப் புணர்ச்சி மரபு எனும் ஒரே இயலில் கூறப்பட்டிருத்தல் இந்நூலின் தனி அணுகுமுறையாகும். புணர்ச்சி விதிகள் பொதுவாக்கப்பட்டு ஒலிகளின் அடிப்படையில் கூறப்பட்டுள்ளன. சொற்களை எடுத்து விதந்தோதும் தரவு (data) முறை இதில் காணப்படவில்லை.

ஒலியனியல், உருபனியல், உருபொலியனியல் எனும் வெவ்வேறு இயற்செய்திகளை ஒருங்கிணைத்து, எழுத்திலக்கணமாகக் கருதி, எழுத்ததிகாரத்தில் கூறும் முந்தைய இலக்கண நூல்களின் நெறியினையே இந்நூலும் மேற்கொண்டுளது.

### சொல்லிலக்கணம்

தமிழ்ச் சொற்களாகப் பெயர், வினை, இடை, உரி எனும் நான்கையும் வகைகளாக இலக்கண நூல்கள் கூறுகின்றன. எனினும் சொல்லுக்குரிய இயல்புகள் யாவற்றையும் பெற்ற பெயர், வினை ஆகிய இரண்டனை மட்டுமே முதன்மையானவை என்று தொல்காப்பியம் உள்ளிட்ட முந்தை நூல்கள் கருதுகின்றன. இடையும் உரியும் பெயர், வினை இரண்டனையும் சார்ந்து வருதலும் அவற்றின் இலக்கணப் பொருளை உணர்த்தும் பத உறுப்புகளாக அமைதலும் ஆகிய இலக்கணங்களைப் பெற்றுள்ளமையால் இவ்விரு

முந்தைய நூல்கள் இடை, உரி ஆகிய சொற்களையும் இடையியல், உரியியல் என்று தனித்தனி இயல்களை அமைத்து விளக்கியுள்ளன. இத்தகைய இயல் அமைப்பு பெயர், வினை எனும் இரண்டனுக்கும் இடையும் உரியும் இணையானவையா என்ற ஐயத்திற்கு இடமளித்துளது. ஆனால் சுவாமிநாதத்தில் இந்த ஐயத்திற்கு முற்றுப் புள்ளி காணப்படுகின்றது.

பெயர் இலக்கணம் பெயர் மரபிலும் வினை இலக்கணம் வினை மரபிலும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இடைச்சொல், உரிச்சொல், வழுவமைதிகள், தொகைநிலைத் தொடர்கள், பொருள்கோள் ஆகிய செய்திகள் எச்சமரபில் கூறப்பட்டுள்ளன. இடைச் சொற்களில் விகுதிகள், கால இடைநிலைகள் ஆகியன சொல்லின் உறுப்புகளாகி, இலக்கணப் பொருள் உணர்த்துவன. ஏனைய வேற்றுமை உருபுகள், சாரியைகள், இசை நிறைகள், அசைநிலைகள், தத்தம் பொருளைக் குறிப்பாக உணர்த்துவன ஆகியன தொடரமைப்பில் வரத்தகுந்தன. உரிச்சொற்களை அடைமொழிகளாக நன்னூல், தொன்னூல் விளக்கம் போல்வனசுட்டுகின்றன. இதன்வழி உரிச்சொற்களும் தொடரமைப்பிற்கு உரியனவே என்று அந்நூல்கள் கருதுகின்றன. இந்நூல் இடைச்சொல், உரிச்சொல் ஆகியனவும் வழுவமைதிகள், தொகைகள் போல்வனவற்றோடு ஒருங்கிணைக்கத் தக்கன என்று கருதி, எச்சமரபில் அவற்றையும் கூறுகின்றது. எனவே சொல் என்று கூறத் தகுந்தன பெயர், வினை எனும் இரண்டுமே; இடையும் உரியும் அவற்றுக்கு இணையானவை அல்ல எனச்சுவாமிநாதம் கருதுகின்றது எனலாம்.

### பொருளிலக்கணம்

பொருளிலக்கணம் அகத்திணை மரபு, கைக்கோள் மரபு, புறத்திணைமரபு என மூன்றாகப் பகுத்து விளக்கப்படுகின்றது. முதல், கரு, உரிப்பொருள்கள் அகத்திணை மரபிலும் களவு, கற்பு ஆகிய ஒழுக்கச் செய்திகள் கைக்கோள் மரபிலும் விளக்கப்படுகின்றன. முதல், கரு, உரி மூன்றும் அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவானவை; எனினும் அகவொழுக்கம் வெளிப்படையாகக் கூறத்தகாத பண்பாட்டு மரபும் நுண்ணுணர்வும் உடைய காரணத்தால், அவ்வொழுக்கத்தைப் புலப்படுத்தும் கருவியாக முதல், கருப்பொருள்கள் புனைந்துரையாகிய நாடக இலக்கிய நெறியாகிய அகவொழுக்கத்திற்கு உரியனவாக இலக்கண நூல்களில் கூறப் படுகின்றன. முந்தை நூல்களைப் பின்பற்றிச் சுவாமிநாதமும்

வகைச் சொற்களும் இரண்டாந்தரமாக, சிறப்பற்றவையாகக் கருதப்படுகின்றன என்பது அறிஞர்களின் கருத்து. எனினும் அகத்திணைமரபு என்ற இயலை அமைத்துள்ளது; முதற்பொருள் முதலிய மூன்றனையும் அகவொழுக்கத்திற்கே உரியன என்று கருதினால், இந்நூல் அகத்திணை மரபு புறத்திணை மரபு என்று இரு இயல்களை மட்டுமே அமைத்திருந்தால் அறிவாய்ந்த தாயிருக்கும். ஆனால் அறிவினும் மரபினுக்கே இந்நூல் முன்னுரிமை தருதலால், முப்பிரிவு அமையலாயிற்று. மேலும் மூன்று பிரிவாகப் பகுத்தல் என்னும் நெறியும் இதற்குக் காரணமாகலாம்.

### யாப்பிலக்கணம்

யாப்பிலக்கணத்தில் இடம் பெற்றுள்ள மூவகைப் பகுப்பு ஏற்புடையது. செய்யுளின் உறுப்புகளும் செய்யுள் வகைகளும் முறையே உறுப்பு மரபிலும் பாவின மரபிலும் விளக்கப்படுகின்றன. பிள்ளைத் தமிழ், கோவை, உலா, மடல் போன்ற சிற்றிலக்கியங்களின் அமைப்பை விவரிக்கும் பாட்டியற் செய்திகள் பிரபந்த மரபில் இடம்பெற்றுள்ளன.

### அணியிலக்கணம்

அணியதிகாரத்தில் முதல் இரண்டு மரபுகளிலும் முறையே பொருளணிகளும் சொல்லணிகளும் கூறப்பட்டுள்ளன. மூன்றாவதான அமைதிமரபு ஒரே நூற்பாவைக் கொண்டுளது. இதில் இடமலைவு, உலகமலைவு, கலைமலைவு, காலமலைவு, ஆகமமலைவு, நியாயமலைவு, எழுத்துவழு, சொல்வழு, பொருள்வழு, யாப்புவழு, அணிவழு, ஆனந்தக்குற்றம் என்பன பட்டியலிடப்பட்டு, இவற்றை நீக்குதல் வேண்டும் என்று சுட்டப்பட்டுள்ளது. இக்குற்றங்களின் இயல்பு விவரிக்கப்படாதது இந்நூலில் காணப்படும் குறையாகும். ஏற்கனவே அறிந்தவர்க்கு நினைவூட்டுமாறு இந்நூற்பா அமைக்கப்பட்டுள்ளது.

### திட்டமிட்டவாறு விவரித்தல்

நன்னூலில் காணப்படுதல் போன்று திட்டம் (Scheme) அமைத்து, அதிலுள்ள முறைப்படி இலக்கணங்களை விவரிக்கும முறை சுவாமிநாதத்திலும இடம் பெற்றுள்ளது.

''பெயர்எண்முறை பிறப்புவடிவு அளவுமுத னிலையே
பின்னிலையே இடைநிலைபோ லியதாம்பத் துடனே
முயல்பதமும் புணர்வுறப்ம் பன்னிரண்டாய்''

நூல்களின் செல்வாக்கு

சுவாமிநாதத்தில் தொல்காப்பியம், நன்னூல், இலக்கண விளக்கம், இலக்கணக்கொத்து, நம்பியகப்பொருள்விளக்கம், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், வெண்பாப்பாட்டியல் ஆகியவற்றின் செல்வாக்கு மிகுதியாகக் காணப்படுகின்றது.

திட்டம் அமைத்து இலக்கணத்தை முறையாக விவரித்தல், வடமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துதல் போல்வன நன்னூலின் தாக்கத்திற்குச் சான்றாகும்.

> ''.........................அருளான்
> மொழிக்குக்கா ரணமாகி நாதகா ரியப்பட்
> டயரொலியோர்க் கெழுதில்எழுத் தாம் ......'' (14)

எழுத்துக்குக் கூறப்படும் இலக்கணம் சைவ நெறியைப் பின்பற்றியது. இந்தக் கோட்பாடு நன்னூலின், 'மொழிமுதற் காரணமாம் அணுத்திரளொலி எழுத்து' எனும் சமணக்கோட்பாட்டை மறுத்து இலக்கண விளக்கத்தில் மேற்கொள்ளப்பட்டதாகும். புறத்திணைகள் ஏழு என்று கொள்வதும் அவற்றுக்கு இணையான அகத்திணைகளைச் சுட்டிச் செல்வதும் தொல்காப்பிய நெறியாகும். இந்நெறியினையே இலக்கணவிளக்கமும் வழிமொழிந்தது.

சார்பெழுத்தின் வகைகள் பத்து எனும் நெறியில் நன்னூலைப் பின்பற்றும் இந்நூல் அவற்றின் விரியைக் கூறுதலில் இலக்கண விளக்கத்தைத் தொடர்கின்றது.

வினைச் சொல்லிலக்கணம் கூறுதலில் இலக்கணக்கொத்தின் கருத்துகள் ஊடுருவிச்செல்வதைக் காணலாம்.

> ''வினைவினைபேர் இடையுரியிற் பிறந்துமுத னிலையே
> விதித்தொழிற்பேர் வினைமுற்றீ ரெச்சமென ஐந்தாய்...''
> (சுவாமிநாதம் 47)

> ''பெயர்வினை இடையுரியிற் நான்கடியானும்
> பிறக்கும் வினையெனப் பேசுவர் புலவர்.''
> (இலக்கணக்கொத்து 68)

> ''முதனிலை தொழிற்பெயர் முற்று ஈரெச்சமென்று
> ஐவகை யுள்ளே அடங்கும் வினையே...''

நம்பியகப்பொருள் நூற்பாக்களை முன் மாதிரியாகக் கொண்டு அகத்திணை, கைக்கோள் மரபுகளில் நூற்பாக்கள்

அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய இலக்கணங்களில் தண்டியலங் காரம், வெண்பாப்பாட்டியல், யாப்பருங்கலக்காரிகை தழுவல்கள் இடம் பெற்றுள்ளன.

'பெயர் எண் முறை...' (14) எனும் திட்ட நூற்பா 'எண்ணு தற்கும் பெயர் கருவியாதலின் அதனை முற்கூறாதது முறையன்று' என்று சிவஞான முனிவர் இலக்கணவிளக்கச் சூறாவளியில் (பக் 65) கூறியதை மனத்தில் கொண்டுதான் நன்னூலார் கூறிய 'எண் பெயர் முறை .....' என்ற முறையை மாற்றி இந்நூலில் அமைக்கப் பட்டுள்ளது (செ. வை. சண்முகம், 1975:17)

*சிலகுறைகள்*

சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துக்களைச் சுட்டுமிடத்து விளக்க நெறி குறையுடையதாக உளது.

''வந்த வுயிர்கசதந பமவ்வில்என்பானான்கும்
வஞய எட்டாறு ஆறு......'' (21)

இந்நூற்பாவில் வ, ஞ, ய என்னும் மெய்கள் முறையே எட்டு, ஆறு, ஆறு உயிர்களுடன் சேர்த்து உயிர்மெய்யாகச்சொல் முதலில் வரும் என்பது தெரிய வருகின்றது. இங்கு இன்னின்ன உயிர்களுடன் என்பது சுட்டப்படாததால், கற்போருக்கு மயக்கம் உண்டாகுமேயன்றித் தெளிவு ஏற்படாது. நன்னூல் போன்ற இலக்கண நூல்களையும் உரையாசிரியர்களின் கருத்துகளையும் அறிந்தவர்களால் கூட ஓரளவு உய்த்துணரவியலுமேயன்றி, திட்ட வட்டமாகச் சுவாமிநாதத்தின் கருத்து இதுவே எனக் கூறுதல் இயலாது.

குற்றியலுகரம் வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர், உயிர்த்தொடர், ஆய்தத்தொடர் என ஐந்து வகைப்படும் என்று உணரும் வகையில் சுவாமிநாதம் நூற்பாவை அமைத்துளது.

''வன்மை மென்மை இடைமை யுயிராய்தம் என்றைந்
தொடர்க்கீழ் வல்லெழுத்தா ருக்குறுகும்...'' (18)

நெடிற்றொடர்க் குற்றியலுகரத்தை ஆசிரியர் விடுத்துள்ளார். நெடிற்றொடர் ஈரெழுத்தொருமொழியாதலால், தொடர் மொழிக் குற்றியலுகரங்கள் ஐந்தையும் தொகுத்துரைத்த ஆசிரியர் மறதியால் அதனை விட்டிருக்கலாம்.

*செய்திகள் சில*

ஐகாரக் குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும் சொல்லின் முதலிலும் இறுதியிலும் வருங்கால் ஒன்றரை மாத்திரையாயும் இடையில் வருங்கால் ஒரு மாத்திரையாயும் ஒலிக்கும்.

''..... ஐஔ முதலீறு
ஒன்றரை இடையொன்றாம்'' (20)

ஔகாரம் இடையிலும் இறுதியிலும் வருமாறு தமிழில் சொல் இல்லை. கௌ, வௌ என்பவற்றை இரு எழுத்துகளாகக் கொண்டால் இறுதியில் வரும் எனலாம். ஆனால் மரபிலக்கண ஆசிரியர்கள் புணர்ச்சி ஒழிந்த இடங்களில் உயிர்மெய்யெழுத்தை ஒரெழுத்தாகவே கொள்வர். இரு எழுத்துகளாகக் கொண்டால் நௌவி, மௌவல் போன்றவற்றில் ஔகாரம் இடையில் வருவதாகக் கருதமுடியும். அவ்வாறாயின் இந்நூலாசிரியர், நன்னூல், இலக்கணவிளக்கம் போன்ற முந்தைய நூல்களினின்று வேறுபடுகின்றார் எனலாம்.

கிறு, கின்று, ஆநின்று என்பவற்றோடு கிற்று எனும் இடைநிலையும் நிகழ்காலத்திற்குக் கூறப்பட்டுளது (25)

வேற்றுமை உருபுகள், சாரியைகள், விகுதிகள், இடைநிலைகள், இசைநிறைகள், உவமை உருபுகள், அசைநிலைகள், தத்தம் பொருளை உணர்த்துவன (குறிப்புப் பொருள் உணர்த்துவன, எழுத்தணவல் எனும் ஒன்பது வகைகள் இடைச்சொற்குக் கூறப்பட்டுள்ளன. எழுத்தணவல் என்பது புதிய வகையாகும். எழுத்தணவல் என்பதற்குக் கரம், காரம் போன்ற எழுத்துச்சாரியைகள் என்று செ. வை. சண்முகம் (1975:119) பொருள் கொள்கின்றார். எழுத்துச் சாரியையும் இடைச்சொல்லின் வகையே; எனினும் பிற நூல்கள் அதனை விதந்து கூறவில்லை.

''அறமுதனான் கினில்வீடு சொலற்கரிது ஆகையினால்
அறம்பொருள்இன் மும்பொருளாம் அவற்றின் அறம் பொருளே
புறம் அதுவாம் இன்பம்அகம் ......'' (71)

புறத்திணையில் கூறப்படுகின்ற வீரத்தை மட்டுமே புறம் என்று இக்காலத்துச் சிலர் பிழையாக உணர்தல் போன்று நூலா

சிரியர் காலத்தும் அகம் யாது? புறம் யாது? என அறிவதில் தெளிவிலார் இருந்தமையால் இவ்வாறு தெளிவு செய்கின்றார் எனக் கருதலாம்.

இன்னும் சிலவற்றையும் இந்நூற் செய்திகளாகச் சுட்டலாம்.

ஐந்துமுதல் பன்னிரண்டு அடிகளில் பஃறொடை வெண்பா அமையும்.

பன்னிரண்டுக்கு மிகுதியாக வரும் வெண்பா கலிவெண்பா எனப்படும்.

வெண்பாவும் அகவற்பாவும் கலந்த மருட்பாவை இந்நூல் ஆசிரியப்பாவின் வகையாகக் கருதுகின்றது.

முடிவுரை :

சுவாமிநாதம் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய ஐந்திலக்கண நூல். ஒவ்வோர் அதிகாரமும் மூன்று மரபு எனும் இயலை உடையது. முந்தைய நூல்களில் விரிவாகக் கூறப்பட்ட செய்திகளைத் தமிழ் மரபு வழுவாது சுருக்கிக்கூறுதல் வேண்டும் எனும் நோக்கில் இயற்றப்பட்ட நூலிது.

புணர்ச்சிக்கருத்துகள் பொதுமைப்படுத்தப்பட்டு, ஒலிகளின் அடிப்படையில் ஒரே இயலில் கூறப்பட்டுள்ளன; தரவுமுறை மேற் கொள்ளப்படவில்லை.

இடைச்சொல்லும் உரிச்சொல்லும் தொடரமைப்பிற்கு உரியன: பெயர், வினைச்சொற்களுக்கு இணையானவை அல்ல எனும் கோட்பாடு உறுதியாக இந்நூலில் புலப்படுகின்றது.

பொருளிலக்கணத்தை அகத்திணையியல், புறத்திணையியல் என்ற ஈரியலாகப் பகுத்திருந்தால் சிறப்பாயிருக்கும். மூன்றுபிரிவு எனும் பகுப்புநெறி அறிவியலுக்குத் தடையாயிற்று.

தொல்காப்பியம் முதலிய பல நூல்களின் கருத்துகளும் நூற்பா வடிவமைப்பின் மாதிரியும் இந்நூலில் முழுதுமாக இடம் பெற்றுளது.

குற்றியலுகரத்தின் ஐந்து வகைகள் மட்டும் சுட்டப்பட்டுள் ளன. நெடிற்றொடர்க் குற்றியலுகரம் மறதி காரணமாக நூலில் இடம் பெறவில்லை.

ஐகாரக்குறுக்கம் இருவகை ஒலியினை உடையது என்பதும் ஔகாரம் சொல்லின் மூவிடத்தும் வரும் என்பதும் புதிய செய்திகளுள் நினைக்கத்தக்கன.

எழுத்துச் சாரியைகள் இடைச்சொல்லின் வகையாகச்சுட்டப் பட்டிருத்தல் சிறப்பான ஒன்றாகும்.

## குறிப்புகள்

1. நன்னூல் முதலிய நூல்கள் நூல்வழியைப் பாயிரம் என்று கூறுகின்றன.

2. அமிழ்து எனத் தமிழை ஆசிரியர் சுட்டுதல் சொற்பிறப்பியல் முறையில் ஏற்புடையதே. தமிழ் என்பது தகரம் இழப்புற்று அமிழ் என்றானது. தம்பியை அம்பி என்பதும் தழலை அழல் என்பதும் இத்தகையவே. அமிழ் எனும் அடிச்சொல் நாளடைவில் அமிழ்தம் என்றாயிற்று. அது வடமொழியில் அம்ருதம் என்றானது. இறவாமை, இனிமை எனும் பொருளில் தமிழர் தம் மொழியை அழைத்தனர். ஆனால் ஆரிய—திராவிட வெறுப்புணர்வு காரணமாக வடமொழியினர் தமிழையும் தமிழரையும் த்ராவிட என்று அழைத்தனர். த்ராவிட எனும் சொற்கு நாடோடியாக அலைந்து திரியும் (த்ரா) கயவர் (விட) என்பது பொருள். எனவே தமிழ் வேறு; திராவிட எனும் சொல் வேறு என்றறிக. தமிழிலிருந்து திராவிட எனும் சொல் உருவானது என்பதும் திராவிட என்பதிலிருந்து தமிழ் எனும் சொல் உருவானது என்பதும் பொருந்தாக் கூற்றுகளாகும். இவ்வாறே ஆரிய எனும் சொல்லுக்குத் தமிழர் 'மிலேச்சர்' எனும் பொருளையும் கற்பித்தனர். 'ஆரிய' என்பதற்கு வடமொழியினர் கருதிய பொருள் 'சான்றோர்' என்பதாகும்.

# தமிழ் அகராதியில் சொற்கள் : சில முடிபுகள்

—பேரறிஞர் எஸ்- சௌந்தரபாண்டியன்

அந்தக்காலத்தில் தமிழ் நிகண்டுகளைத் தமிழறிஞர்கள் மனப்பாடமாகப் படித்து வைத்திருப்பர். ஆனால், இக்காலத்தில் எப்போதாவது புரட்டிப் பார்த்துக்கொள்ள மட்டும்தான் அகராதி என்ற நிலை உள்ளது. தமிழ் உயர் வகுப்புகளுக்குத் தமிழ் அகாரதி களைப் பாடமாக வைக்க வேண்டும்.

இவண், அகராதிகளில் காணலாகும் தமிழ்ச் சொற்கள் குறித்த சில ஆய்வுகளைக் காண்போம்.

(1) ஏடெழுதுவோரால் ஏற்பட்ட பிழைகளாலும், எழுத்து களின் ஒப்புமைகளாலும் பல சொற்கள் அகராதிகளிற் சேர்ந் துள்ளன.

மையல் என்ற சொல், சில ஓலைச்சுவடி அகராதியில் 'மய்யல்' என்றுள்ளது. 'கடிவாளம்' என்ற சொல்லுக்குப் பதிலாக, சில சுவடி அகராதிகளில் 'கடுவாளம்' என்றே உளது. ஓர் ஓலைச் சுவடி அகராதியில், முரிகை-வாய்மடிக்கை, முறிகையும்' என்று உள்ளது. ஓலை எழுதியவர் காலத்திலேயே, முரிகை, முறிகை என்ற இருவடிவங்களும் அகராதிகளிற் புகுந்துவிட்டன என்று தெரிந்து கொள்கிறோம்.

(2) அகராதி தோன்றும் காலத்தில் செல்வாக்குடன் இருக்கும் இலக்கியங்களில் மிகுதியாகப் பயிலும் சொற்களுக்கு அந்த அகராதி இடமளிக்கும்.

தேவாரப் பாடல்கள் செல்வாக்குடன் இருந்தபோது, அப் பாக்களிற் பயின்ற சொற்கள் அக்கால அகராதிகளில் ஏறின. அகராதிகளைக் கூர்ந்து ஆய்ந்தால் இந்த உண்மை புலனாகும்.

(3) மக்கள் நாவில் வழங்கிச் செல்வாக்குப் பெற்றுவிட்ட சொற்களுக்கும், அக்காலத்தில் தோன்றும் அகராதிகள் இடமளித் துள்ளன.

ஆதளை-காட்டாமணக்கு; ஆதாளை என்றும் இது மக்களால் ஒலித்து வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்: அதனால், சில மருத்துவ ஓலைச்சுவடிகளில் 'ஆதாளை - காட்டாமணக்கு' என்று காணப் படுகிறது.

'கருமை' என்று இடையின ரகர உகரம் வந்திருப்ப, 'கறுப்பு' என வல்லின எழுத்தோடு எழுதுவதற்கும் இதுவே காரணம். கருமை என்று உச்சரிக்கும் போது, இடையில ரகர ஒலியே வருகிறது; ஆனால், மக்கள் 'கறுப்பு மாடு' 'கறுப்புக் குதிரை' என்றெல்லாம் உச்சரிக்கும் போது இயல்பாகவே, 'று' கரமே ஒலிக்கிறது.

(4) கி.பி. 9ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப் பட்ட அகராதி ஓலைச்சுவடிகளில்,

'குணில்-எறி கருவி; கருவியாவது, சாதனம்'
'நிறத்தைச் சொல்லுகிறது'
'மா-விலக்கு என்றபடி'
'காவில்-காவடிக்குப் பெயர்'

என்பன போன்ற விளக்கக் குறிப்புகளைக் காணலாம். முற்கால அகராதிகளில் இத்தன்மையைக் காண இயலாது. விரிவுரை கூறும் ஒரு பாங்கு, அகராதியிலும் தலை காட்டியுள்ளது என உணர் கிறோம்.

(5) நிகண்டுகளின் தாக்கத்தைப் பின்னெழுந்த தமிழ் அகராதிகளில் காணமுடிகிறது.

'அஞ்சுனமாவது அரசமரம்'
'மா—மானும் விலங்கும்'

போன்று எடுத்துக்காட்டுகள், சொல்லுக்குச் சொல் பொருள் மட்டும் எழுதும் அகராதி முறைக்கு முந்தைய நிகண்டுச் சூத்தி ரங்களை நினைவூட்டுகின்றன.

(6) முற்கால நிகண்டுகளிற் காண இயலாத, பிற்கால ஓலைச்சுவடி அகராதிகளில் காணக்கூடிய ஒரு சொல்வகை, சாதி கள் பற்றியதாம். சில ஓலைச்சுவடி அகராதிகளில் 'கவுண்டர்' போன்ற சிலசாதிப் பெயர்களைக் காணமுடிகிறது; பழங்கால நிகண்டுகளில் இப்படிப்பட்ட சாதிப் பெயர்ச் சொற்களைக் காண முடியாது.

(7) 'கை' விகுதிகள் பெற்ற சொற்கள் பலவற்றைப் பிற்கால ஓலைச்சுவடி அகராதிகளிற் காண்கிறோம். கவருகை, சிரகிக்கை என்றெல்லாம் ஓலையில் உள்ள அகராதிகளில் தென் படுகின்றன.

உகரச்சாரியை புணர்ந்த சொற்களை, நிகண்டுகளுக்குப் பின்னெழுந்த அகராதிகளிற் காண்கிறோம்.

புல்லு
நெல்லு
புள்ளு
வில்லு

என்றெல்லாம் வருவன சான்றுகள்.

(9) சொற்கள் ஓர் அடியிலிருந்து பலவாறாகக் கிளைப்ப தற்கு ஒலிப்பு, எளிமை ஒரு காரணியாகிறது. அதனால்தான், 'திரு' 'தில்', 'திட்' போன்ற அடிச்சொற்களிலிருந்து பல தமிழ்ச் சொற்கள் உருவாகியிருப்ப, 'தின்' எனும் அடியிலிருந்து அவ்வள வாகச்சொற்கள் கிளைக்கவில்லை என அறிகிறோம்,

(10) ஓலைகளில் அகராதி எழுதியோர், இக்கால அச்சு நூல் அகராதிகளில் இருப்பது போன்று துல்லியமான அகரவரி சையைப் பின்பற்றவில்லை. ஓலை எழுதுவதில் இருந்த இடர்ப் பாடு, இடையிடையே சொற்களைச் சேர்க்க வேண்டிய நிலை போன்றவற்றால் அங்ஙனம் நிகழ்ந்திருக்கலாம். சகர வரிசைச் சொற்களுக்கு முன்பு டகர வரிசை. அகர வரிசைச் சொற்களுக்கு முன்பு இகர வரிசை என்றாங்கு வரிசை மாற்றங்கள் ஓலைச் சுவடி அகராதிகளில் வந்திருக்க காண்கிறோம்.

(11) மருத்துவர்களிடம் மட்டும் இந்த 'பரிபாஷைச்' சொற்கள், மற்றவர்களுக்கும் தெரிய வேண்டும் என்ற முனைப்பு எழுந்தபோது, மருத்துவ அகராதிகள் பல தோன்றின எனலாம். சில ஓலைச்சுவடி அகராதிகள் 'பரிபாஷை' அகராதி என்ற பெயருடன் இருப்பது சான்று.

(12) தமிழ்ச் சொற்களுக்காக ஏற்பட்ட தமிழ் அகராதி களிலிருந்து பல சொற்களை அப்படியேம், திரித்தும் வடமொழி யாளர்கள் வடசொற்களாக ஆக்கிக்கொண்டனர்!

ஆமலகம்–நெல்லி; தமிழ் ஓலை அகராதிகளிலில் இவ்வாறு காணப்படுகின்றது. ஆமலக்கம் என்று அழுத்தி உச்சரித்து இதையே

வடசொல் என்று கூறிவிட்டனர்! 'அலவனம்-இந்துப்பு' என்று ஓலையில் உள்ள தமிழ் மருத்துவ அகராதி கூறுகிறது. 'லவனம்' என்று இதையே மாற்றி, லவனம் என்பது வடசொல் என்றனர்! 'அம்பெருக்கம்-தாமரை' என்று அழகாகத் தமிழ் ஓலை அகராதிகள் உள்ளது. இதையே சற்று மாற்றி, அம்போருகம் என்றால் தாமரை, அது வடசொல் என்றனர்!

(13) மருத்துவக் கலைச் சொற்கள் அரியவை; பலருக்கும் பயிற்சி இல்லாதவை. இதனால் அச்சிடப்பட்ட பழைய மருத்துவ அகராதிகளில் பதிப்புப்பிழைகள் பல புகுந்துள்ளன.

'ஈரவள்ளி - வெங்காயம் என ஓர் ஓலைச்சுவடி அகராதியில் உளது 'ஈருள்ளி' என்றுதான் இருக்கவேண்டும். (ஈர்+உள்ளி=ஈருள்ளி; உரிக்க உரிக்க உள்ளே செல்வதால் அப்படி வந்தது)

(14) மருத்துவ ஓலைச்சுவடிகளை 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பதிப்பித்தவர்கள், ஓலையில் இருந்த அதே முறையிலேயே பல சொற்களைப் பதிப்பித்துள்ளதைக் காணமுடிகிறது.

அங்கி - சாதிலிங்கம்
அங்கி - நெருப்பு
அங்கி - கவசம்

என, ஒரே சொல்லை மும்முறை அடுத்தடுத்து எழுதிப் பொருள் அச்சிட்டுள்ளனர். அங்கி-சாதிலிங்கம்: நெருப்பு, கவசம் என ஒரு முறை மட்டும் எழுதினால் செம்மையாக இருக்கும்.

இவ்வாறு தமிழ் அகராதிகள் ஆய்வுக் களங்களை அமைத்துத் தருகின்றன. அகராதி ஆய்வு, தமிழர் நாகரிக ஆய்வே. எனவே, காலந்தோறும், தமிழில், தமிழரிடத்தில் புதிதாகச் சேரும் சொற்களுக்கு மதிப்பளித்து அவற்றைக் கொண்ட அகராதிகளையும் புதிது புதிதாக வெளியிடல் அறிஞர் கடனாம்.

# இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்
# -திருக்குறள்-

—பேரறிஞர் **இ. இராசு**

திருவள்ளுவர் எழுதிய 1330 ஈரடிப்பாடல்களின் தொகுதி திருக்குறள் எனப்படுகிறது. இப்பாடற் கருத்துக்கள் யாவும் திருவள்ளுவரே கண்டறிந்து கூறியவை எனக்கொள்ள முடியாது. தமக்கு முன்னர் வாழ்ந்த தமிழ்ச்சான்றோர் கருத்துக்களின் பிழிவை, தமது நுண்ணறிவால் திருவள்ளுவர் தந்துள்ளார். குறள் என்பது ஒரு குறுஞ்செய்யுள் வகையாகும்.

இந்நூல் தமிழ்மொழியில் இயன்றுள்ளது. தமிழ் தென்னிந்தியாவைச் சேர்ந்த ஒரு தொன்மையான மொழியாகும். இம்மொழி இந்தோ ஆரியக் குடும்பத்தைச் சேர்ந்ததன்று. திருவள்ளுவரது வாழ்க்கையைப் பற்றி நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியவில்லை.

திருக்குறளுக்கு நானூறு ஆண்டுகட்கு முன்னர்த்தோன்றிய மனு சாத்திரத்திற்கும் திருக்குறளுக்கும் பெருத்த வேறுபாடு உள்ளது. மனுசாத்திரம் பிராமணக் கருத்துக்களின் மேலாதிக்கம் பெற்று விளங்குகிறது. மனு சாத்திரத்தில் இம்மை வாழ்க்கை வலியுறுத்தப்படுகிறது. கூடவே, இம்மை வாழ்க்கையை மறுக்கும் கோட்பாடும் வலிமை பெற்றுள்ளது. எனவே இம்மை வாழ்க்கைக்கு ஆதரவாகவும், அதற்கு எதிர்ப்பாகவும் முரண்பட்ட கருத்துக்கள் மனுநூலில் காணக்கிடக்கின்றன. ஆனால் திருக்குறளில் உலக வாழ்க்கை இன்பமானதாகையால் அதைப்போற்ற வேண்டும் என்றும், உலக வாழ்க்கையின் பற்றுக்களை அறுக்க வேண்டும் என்றும் இரு கொள்கைகளும் ஒன்றற்கொன்று தொடர் பில்லாமல் இருவேறு கருத்துக்கள் போல விலகியே இருக்கின்றன. உலக வாழ்க்கையின் இன்ப நிலையைப் பற்றிக்கூறும் 250 குறட் பாக்கள் தனி இயலாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் உலகியல் வாழ்க்கை போற்றப்படுகின்றது. பிற்காலத்தில் மானிடக்

காதற்பாடல்களை தெய்வக் காதலாக - இறை-ஆன்மா தொடர்பு டையதாக-உருவகித்துக் காட்டவும் இவை கைகொடுத்தன.

கிறித்தவ சமய இலக்கியத்திலும் இதுபோன்ற போக்கினை நாம் காணலாம். பண்டைய மன்னர் சாலமனின் பாடல்கள் திருமணத்தின் போது பாடக் கூடிய காதற்பாடல்கள் என்ற புகழினைப் பெற்றிருந்தன. ஆனால் பழைய ஏற்பாட்டில் அவை இடம் பெற்றபோது, வானத்தில் உலவும் மீட்பருக்கும், மண்ணில் வசிக்கும் மனிதருக்கும் இடையே கொண்ட தொடர்பைக் காட்டும் பாடல்கள் என்று அவை கருத்து மாற்றம் பெற்றன.

மனுநூலில் உள்ளது போன்று வினைப் பயனைக் குறித்த கருத்துக்கள் குறளில் உள்ளன. ஒருவனுடைய ஒழுக்கமே அவனை மறுபிறவியாலும் நற்பிறவி எடுக்க உய்க்குமாதலால் நல்லொழுக்கம் வலியுறுத்தப்படுகிறது. மன்னுயிர்க்கு நன்மை செய்தால் நற்பேறு அடைவார்கள் என்ற இம்மைப்பயனைச் சுட்டும் எளிய பாமரத் தத்துவம் திருக்குறளில் காணப்படுகிறது. இத்தகு கருத்துக்கள் மனுநூலில் கூறப்படவில்லை. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, மனுக் கருத்துக்களில் காணப்படுவது போன்ற பிராமண மேலாதிக்கம் திருக்குறளில் காணப்படாதது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். வினைப்பயனை பிராமண நூல்களும், புத்தசமயமும், பகவத் கீதையும் உச்சிமேல் வைத்துப் போற்றுகின்றன. ஆனால் குறளிலோ வினைப்பயனை நுகரும் வாய்ப்புப் பற்றிய குறிப்பிருக்கிறதே தவிர எல்லாம் வினையாலேயே ஆகும் என்று எல்லாவற்றிற்கும் வினைப் பயனையே காரணம் காட்டி, அதனால் மறுமை இன்பம் வாய்க்கும் எனக் கூறும் போக்கு இல்லை

அறத்தைக் காப்பாற்றுவதற்காக அறநிலையை மீறுவதில் தவறில்லை என்று உலக இயக்கத்தோடு ஒத்துப்போகும் நிலையில பகவத்கீதை அறத்தை வலியுறுத்துகிறது. ஆனால் அறம் வழுவாமல் அறவழியிலேயே அறத்தைக் காக்கவேண்டும் என்று திருக்குறள் கூறுகிறது. வள்ளுவர் கருத்தில்தான் எத்தகு முன்னேற்றம்!

பகவத் கீதையில் இன்னின்னார் இன்னின்ன தொழில் செய்வதற்குரியவர் என்று சொல்லப்பட்டிருப்பது போல, திருக் குறளில் தொழில் அடிப்படையிலான சாதிப்பிரிவுகள் கூறப்பட வில்லை

முயற்சிகள் வெற்றிபெறும் போது மனிதன் அடைகின்ற மகிழ்ச்சியைக் குறளைப் போன்று வேறு எந்த இலக்கியமும் குறிப்பிடவில்லை. இம்மை வாழ்வின் இன்பத்தையும், வாழ்க்கையை 'வாழ்ந்து காட்ட வேண்டும்' என்ற பிடிப்பையும் பல குறட்பாக்களில் காணலாம்.

(எ–டு) தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும் —619

இன்னாமை இன்பம் எனக்கொள்ளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு —630

புத்தரின் போதனைகள் போன்றும், பகவத்கீதை சொல்வது போன்றும், ஆசையை அறுக்கவேண்டும் என்றும், சினத்தை வெறுக்க வேண்டும் என்றும் குறள் அறிவுறுத்துகிறது. இவைகளைப் போன்றே உயிர்களுக்கு உறுகண் நேராமல் அவற்றைக் காக்க வண்டும் என்றும் குறள் மொழிகின்றது.

வாழ்க்கையைப் பற்றி உலகத்துச் சிந்தனையாளர்கள் கருதிய அனைத்துத் தத்துவங்களையும் குறள் ஒருசேரக் கூறுகிறது இவற்றிற்கும் ஒருபடி மேலே சென்று, ஆன்மீகக் காதலை வலியுறுத்துவது மட்டுமல்லாமல் இந்த அறநூலில் மானிடக் காதலறம் போற்றப்படுவதையும் காணலாம்.

இவ்வாறு உறுதியான எண்ண வீச்சுகள் வாயிலாக மானுடத்தின் எளிய அருளுணர்வுகளை குறள் வெளிக்காட்டுகிறது. மனிதன் தனக்குத்தானே உண்மையானவனாகவும், மனித சமுதாயத்திற்குப் பயனுடையவனாகவும் தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்கின்ற போது எழுகின்ற அடிப்படையான பல கேள்விகளுக்கு உயர்ந்த விளக்கங்கள் பலவற்றைத் திருக்குறள் தருகிறது. இத்தகு வீறார்ந்த அனுபவ மெய்ம்மைகளின் தொகுதியை உலகின் வேறெந்த அற இலக்கியத்திலும் காணுதலரிது.

(சுவைட்சர் கட்டுரையில் காணப்படுகின்ற திருக்குறள் மொழிபெயர்ப்புகளில் சில இங்குத் தரப்பட்டுள்ளன. இக்கட்டுரையில் 35 குறட்பாக்களை சுவைட்சர் குறிப்பிட்டுள்ளார். இவற்றை Karl Graul என்பார் 1856இல் வெளியிட்ட Der Kurral என்ற ஜெர்மன் மொழி பெயர்ப்பிலிருந்து சுவைட்சர் எடுத்துக்காட்டியுள்ளார்.)

1. உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து

The gift is not the measure of the gift. its measure is in the magnanimity of the receiver

2. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

To forget good is not good; Immediately to forget what is not good is good

3. புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை
வாய்மையாற் காணப்படும்

Outward purity comes through water Purity; of the heart is manifested in sincertiy

4. இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்ப முறுதல் இலன்

He who is not eager for pleasure, but knows that pain is natural, will remain free from distress

(ஆல்பர்ட் சுவைட்சர் எழுதிய 'Indian Thought and its Development' என்ற நூலில் காணப்படுகின்ற திருக்குறளைப் பற்றி சுவைட்சர் கருத்துக்கள் இங்குத்தரப்பட்டுள்ளன.

வெளியீடு : Charles Black, London, 1951).

# நன்னூல்

—க. வயித்தியலிங்கம்பிள்ளை

நன்னூல் என்பது ''சனகைச் சன்மதிமுனியருள் பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி என்னு நாமத்திருந்தவத் தோனா''லே, அகத்தியந் தொல்காப்பிய முதலிய முந்து நூல் வழியே ''சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச் செவ்வனாடியிற் செறித் தினிது விளக்கித் திட்ப நுட்பஞ் சிறந்த சூத்திரங்களாற் செய்யப்பட்டதோ ரிலக்கண நூல், இது, ஐயிருகுற்றமுமகற்றியம்மாண்பொடு முப்பத்தி ரண்டுத்தியுபமைந்துள்ளது. கற்போரினிதுணர்ந்து கொள்ளுமாறு தொகை வகை விரியிற் றரப்பட்டது. தமிழ்ப் பதங்களைப் பகுத் துணர்ந்து கொள்ளுமாறும் வடமொழிப்பதங்கள் தென்மொழிக்கண் வந்து வழங்குமாற்றை இனிதுணர்ந்து கொள்ளுமாறும் தென்மொழி யிலக்கண நூலுணர்ச்சியோடுதமது வடமொழியிலக்கண நூலுணர்ச்சி யுங்கொண்டு பவணந்தியார் பதவியற்கணமைத்த புது விதிகளும் தன்னுள் வாய்ந்துள்ளது. இத்துணைப்பெருமைவாய்ந்ததாகிய இந் நன்னூலின் சிறப்பு நோக்கியே இதனை, இலக்கணக்கொத்து நூலாரும் ''முன்னோரொழியப் பின்னோர் பலரினுள் நன்னூலாருக் கெந்நூலாரு மிணையோ வென்னும் துணிவே மன்னுக'' எனப் பவணந்தியாரைப் புகழும் வாயிலாற் புகழ்ந்தனர். இங்ஙனமே, ''பல்கலைக் குரிசில் பவணந்தியென்னும் புலவர் பெருமான்'' என நன்னூல் விருத்தியுரைகாரரும் புகழ்ந்தனர். இலக்கண விளக்க நூலாரும் இதனையே அங்கீகரித்து இதன்கணுள்ள சூத்திரங் களையே தந்நூலினும் பெரும்பாலும் பொருத்தியாத்தனர். இதன் சிறப்பு நோக்கிய பலர் காண்டிகைசெய்தனர். பலர் பிரகடனஞ் செய்தனர். இதன் சிறப்பு நோக்கியே விரிவுரையு மெழுந்தது. தொல்காப்பியப் பாயிரவிருத்தி முதலியவற்றிலே சிவஞானசுவாமி களும் இதன் சிறப்பைப் பலவிடங்களிற் புகழ்தனர். ஸ்ரீலஸ்ரீ, ஆறுமுக நாவலர் பெரும்பாலும் இதன் சிறப்பு நோக்கியே இதன் காண்டிகை விருத்திகளைத் திருத்தமுற அச்சிட்டனர். மஹாமஹோ பாத்தியாயா உ.வே. சாமிநாதையரவர்களும் தாம் புதிதாகப் பதித்த இந்நன்னூன் மயிலைநாத ருரையின் முகத்திற்றா முரைத்த

நூலாசிரியர் வரலாற்றிலே இதனையும் இதனாசிரியரையும் நன்கு புகழ்ந்தனர். சுன்னாகம் வித்துவ சிரோமணி அ. குமாரசுவாமிப் புலவரும் தாமியற்றிய புலவர் சரித்திரத்திலே பவணந்தியாரைக் கூறுங்கால் ''இந்நன்னூல் பாணினி வியாகரணம் போலச் சில வகையெழுத்திற் பல்வகைப் பொருள் சொலுந் திட்ப நுட்பஞ் சிறந்தது'' என இதனைப் புகழ்ந்தனர், இதுவே தற்காலத்தில் இந்தியாவிலும் இலங்கையிலுள்ள செந்தமிழ்க் கழகங்களிலும் ஆங்கிலக் கல்லூரிகளிலுங் கற்பிக்கப்படுகின்றது. சுருக்கிச் சொல்லு கில் இதனை அங்கீகரியாதார் இல்லை என்றே சொல்லலாம். அங்ஙனமாக:

இந்நன்னூலைப் பவணந்தியார் பிழையுறச் செய்தனர் என்று இராமநாதன் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ நவநீத கிருஷ்ண பாரதியாரவர்கள் தாமெழுதிச் செந்தமிழில் வெளிப் படுத்திய ''தொல்காப்பியமும் பிற்காலத்தாரும்'' என்னும் விஷயத் திலே கண்டனஞ் செய்தனர். நன்னூலாரைப் புகழ்ந்தரரையன்றி இகழ்ந்தாரை நாமிற்றை வரையறியோம். மஹாமஹோபாத்தியாயர் உ.வே சாமிநாதனய்யரவர்களும், செந்தமிழ்ப் பத்திராதிபராயிருந்த சேதுபதி சமஸ்தான வித்துவான் ரா. ராகவையங்காரவர்களும், இப்போது செந்தமிழ்ப் பத்திராசிரியரா யிருக்கும் வித்துவான் திரு. நாராயணையங்காரவர்களும், சுன்னாகம் வித்துவ சிரோமணி அ. குமாரசுவாமிப் புலவரவர்களும் முதலிய தற்கால வித்துவ சிரேட்டர்களும் கண்டிக்க முன் எழுந்திலர்.

பாரதியாரவர்கள் போலவே இன்னும் பலர் சேனாவரையர், பரிமேலழகர், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களையும் கண்டித்துப் பேர்படைக்கலாமென்று முன் எழுந்தனர். எழுகின் றனர். ஆனால் அவர்களுளொருவரும் பாரதியாரவர்களைப் போல நூலாசிரியரைக் கண்டிக்க முன் எழுந்திலர். ஆகையால் அவர்கள் பாரதியாரவர்களிற் புத்தியுடைவர்களே. முன்னூல்களையும் உரை களையும் கண்டித்துப் புகழ்பெற விரும்பும் பாரதியார் முதலியோர் தாம் புதிய நூலுரைகளியற்றிப் புகழ்படைத்தாலென்னை? அஃது அவர்களான் முடியாதுபோலும். நிற்க.

ஒருவரைக் கண்டனஞ்செய்பவர் அவரினும் அறிவாற்றல் களான்மிக்கராயன்றோ விருத்தல்வேண்டும். இன்றேல் அவர் கண்டனம் எங்ஙனம் அங்கீகரிக்கப்படும். பாரதியாரவர்களோ தாமெழுதிய விஷயத்தைப் பிழையறவெழுதும் ஆற்றலில்லாதவர்

களாயிருக்கின்றார்கள். அங்ஙனமாக அவர்கள் நன்னூலாரைக் கண்டிப்பது எவ்வாறு?

பாரதியாரவர்கள் தாமெழுதிய விஷயத்திலே;

(1) வெளிப்படுத்தினார் பலராவர். இதற்குச் சான்றாக நன்னூல் உடையாரையே இதுபொழுது ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்றனர். இதிற், 'பலராவர்' எனமுடித்து 'இதற்குச் சான்றாக' எனச் சுட்டியதுஉம் வழூஉ. 'எடுத்துக் கொள்ளப்பட்டது' என்பதற்கு எழுவாயின்றாதலும் வழூஉ, வெளிப் படுத்தினார் பலருள் நன்னூலாரும் ஒருவர் என்பது தோன்ற வாக்கியம் எழுதப்படாமையும் வழூஉ.

(2) ''ஆசிரியர்'' என்றனர். இங்கே ஆசிரியரை இன்னார் எனத் தெரித்துக் கூறாமையும் வழூஉ.

(3) ''ஏனைய மூன்றின்'' என்றார். இதிற்றாம் துணியப் பட்டதாகக் கொண்ட மூன்றிற்கு முற்றும்மை கொடாமையும் வழூஉ.

(4) வாளாச் சேறவின் என்பதிற் சகர மிக்கதூஉம் வழூஉ.

(5) ''உயிராவது உயிர்மெய்யாவது தனித்தும் மெய்சார்ந்து வரினும் அவ்வளவினவே'' என்றார். உயிர்மெய் மெய்சார்ந்து வருவது எவ்வாறு? சார்ந்துவருதலின்மையின் வழுவன்றோ? விகற் பத்தால் மெய்சார்ந்துவருதல் உயிர்மெய்க்குமெய்திற்றன்றோ?

(6) ''கண்ணனை'' என்பதால் அளவின் பெயர் கூறுவார் போன்று என்றார். கண்ணிமை, கொடிகளால் அளவின் பெயர் கூறினரன்மையின் அளவின் பெயர் கூறுவார் போன்று என்ற தூஉம் வழூஉ.

(7) ''அவ்வாறாய அனைகளுள், மெய்க்கு வடிவு முதலிய வற்றுட் சில் மாறுபாடும், உயிர்க்கு வடிவு முதலியவற்றுள் அறவே மாறுபாடும் பெறும் எனவும் கொள்க'' என்றார். 'பெறும்' என் பதற்கு எழுவாயின்மையும் வழூஉ. உயிர் வடிவு முதலியவற்றுள் அறவே மாறுபாடும் பெறும் என்றதூஉம் வழூஉ. ''தொல்காப்பி யருக்கும் நன்னூலாருக்கும்'' அது கருத்தன்மையின்.

(8) ''இக்காரணங்களா லியலிற்றிரியா அவ்வுயிர்கள்'' என்றார். இதில், முன் காரணங்களைத் தெரிவிக்காது இக்காரணங் கள் எனச்சுட்டியொழிந்ததூஉம் வழூஉ.

(9) உயிர்கட்கு இயல்குறில் நெடிலாய் வேற்றுமைகொண்டு இயல்பாயும் நீண்டனவாயும் ஒலிப்பனவாம்'' என்றார். ''வேற்றுமைகொண்டு'' என விகாரமெய்துவதாகக் கூறியதூஉம் வழூஉ. இயல் எழுவாய் ஒலிப்பன என்னும் பன்மை முடிபிற்றாய தூஉம் வழூஉ.

(10) ''மெய்கட்கு இயல அரையளவினவாய்த் தனித்திருத்த லும் உயிருடனியைந்தவழி அவை ஒழிவனவும் பிறவும்'' என்றார். இதில் 'அவை' எனப் பன்மையாகச் சுட்டியதூஉம் வழூஉ. 'ஒழி வன' எனப் பன்மையாகக் கூறியதூஉம் வழூஉ.

(11) ''அவ்வுயிர்கள் மெய்யோடியைவது புள்ளியில்லா எல்லாமெய்யும் என்ற விதிப்படி வகுவுதிரிந்துயிர்ந்து, மெய்யின் வழியதென்ற விதிப்படி ஒலிக்குமுறை முதலியனவற்றைப் பெறுதல்'' என்றார் இதில் வடிதிரிந்துயிர்த்தலைத் தொல்காப்பியர் மெய் கட்குக் கூறப் பாரதியாரவர்கள் உயிர்கட்குக் கூறியதூஉம் வழூஉ.

(12) ''தனித்தனி ஒவ்வொரு மெய்யெழுத்தினளவே அரை மாத்திரையாகும்'' என்றார். 'தனித்தனி' 'ஒவ்வொரு' என்பவை களில் ஒன்றே அமையவும் இரண்டுங் கூறியதூஉம் வழூஉ.

இவ்வழூஉக்களேயன்றிச், செவிக்கின்பம் பயவாமை, எடுத்த விஷயங்களை முறையுறக்கூறி விளக்காமை, தொல்காப்பியர் கருத்து இது; உரைகாரர் கருத்து இது; நன்னூலார் கருத்து இது; தங் கருத்து இது என விளங்கக் கூறாமை யாதியபல வழூஉக்கள் பல்கியுள்ளன. இவ்வகை வழூஉக்கள் வாராவண்ணம் விஷதம் யத்தை எழுதத்தெரியாத பாரதியாரவர்கள், தொல்காப்பிய உரை காரர்களையும், நன்னூலாரையும் கண்டனஞ்செய்ய முன் எழுந்தது அதிசயிக்கத்தக்க தொன்றன்றோ? நிற்க.

இனிப் பாரதியாரவர்கள், தொல்காப்பியரோடு நன்னூலார் வழுவடைகின்றார் என்றது உண்மையோ என ஆராய்வாம்.

தொல்காப்பியர் ''எழுத்தெனப்படுவ, அகரமுதனகர இறு வாய் ல்றுவாய் முப்பஃதென்ப - சார்ந்துவரன் மரபின் மூன்றலங்க டையே எனவும், அவைதாம், குற்றியலிகரங் குற்றியலுகர-மாய்த மென்ற, முப்பாற் புள்ளியுமெழுததோரன்ன'' எனவுங், கூறிய இரு சூத்திரப் பொருள்களையும் தாமமைத்து நன்னூலார் ''அது முதல் சார்பென விருவகைத்தே'' எனவும், ''உயிருமுடம்புமா முப்பது.

முதலே'' எனவும், ''உயிர்மெய்யாய்தமுயிரளபொற்றான்-பஃகிய இ உ ஐ ஔ மஃகான்—றனிநிலைபத்துஞ் சார்பெழுத்தாகும்'' எனவும் தொகுத்தும் வகுத்தும் கூறினாரன்றித் தொல்காப்பியரோடு மாறுபாடா கூறுற்றிலர். *தொல்காப்பியர் சார்பெழுத்து மூன்றென நன்னூலார் பத்தென்றது மாறுபாடன்றோ எனின், மூன்றெனக் கூறியபின்னும் தொல்காப்பியர் உயிர்மெய்யும் உயிரளபெடையும் மகரக்குறுக்கமுதலியன கூறுதலானும், அவிநயனாரும் எனையவுங் கூறுதலானும் அவற்றையுஞ் சேர்த்துப் பத்தென்றாராதலின் மாறுபாடு யாண்டையதென்க. அங்ஙனமாயின் தொல்காப்பியர் நியமந் தவறினாரன்றோ? எனின், மூன்றே என வரையறுந்திலராதலிற் றவறிற்றிலர். இங்ஙனமாகப் பாரதியாரவர்கள் ''இதையறியாத நன்னூலார் தாமேதோ நுணுக்கக் கண்டார்போன்று மனக்கோட்டை கட்டி முதனூலோடு மாறுபடவும், முறையின்றிப் படிப்பாரிடர்ப்படவும் 'உயிரளபு' எனத் தொடங்கிக் கூறுவர் என நன்னூலார் மேல்வழுவேற்றல் பயனில் கூற்றாமென்க.

இன்னும், பாரதியாரவர்கள் ''அம்முதலீராறாவி கம்முதன்-மெய்ம்மூவாறென விளம்பினர்புலவர்'' எனத் தொகையறியாது கெடுத்தார் என நன்னூலார் மேற் குற்றஞ்சாற்றினர். நன்னூலார் அங்ஙனம் கெடுத்தாரோ? எனின், அன்று, தொல்காப்பியர் ''அவற்றுள் அ, இ, உ, எ, ஒ என்னு மப்பாலைந்து - மோரளபிசைக்குங் குற்றெழுத்தென்ப'' என்பது முதலிய சூத்திரங்களாலும் உயிர்மெய்களின் தொகை வகை விரிகளையும், அவற்றின் அளவு வடிவு முதலியவற்றையும் விரவக்கூறினார். நன்னூலாரோ, அவற்றுள்; அளவு வடிவு முதலியவற்றைத் தாம் உருவம் மாத்திரை என வகை தோன்ற வேறுவைத்தும்; உயிர் மெய்களை, எழுத்தின் பெயர் கூறுமுகத்தானே'' அம்முதலீராறாவிகம் முதன் - மெய்ம்மூவாறென விளம்பினர்புலவர்'' என்பது முதலிய சூத்திரங்கள் எட்டானுர் தொகைவகை தோன்றவும், பாரதியாரவர்கள் கூறியவைகள் யாவுமையம்யவும்பாத்தனர். அன்றிக் கெடுத்திலர். அங்ஙனமாக நன்னூலார்மேற் குற்றமேற்றியது பாரதியாரவர்கள் ஆராய்ச்சியின் மையேயாம். பாரதியாரவர்கள் ''கசடதபற என்னும் ஆறும் வல்லினம் என்னாது ''வல்லினங் கசடதபற என ஆறே'' எனச் சூத்திரித்ததும் வழூஉ என்றார். 'என' என்பல் எண்ணுப்பொருளில் வருமென்பது பாரதியாரவர்களுக்குத் தெரிந்திலது போலும். ''கசடதபற என்னும் ஆறெழுத்தும் வல்லினமென்னுங் குறியவாம் என்னும் மயிலைநாதருரையை நோக்கித்தெளிக.

# இலக்கியப் பொன்மொழிகள்

## புறநானூறு

1) 'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்'

நீங்கள் பிறர்க்கு நன்மை செய்ய முடியாவிட்டாலும், தீமை செய்யாமலாவது இருங்கள்.

2) 'செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே'

செல்வம் பெறுவதன் பயன் பிறர்க்குக் கொடுத்து மகிழ்தலேயாம்; அவ்வாறின்றித் தானே அனுபவிக்க நினைத்தால் அதனால் ஏற்படும் இழப்புக்கள் பலவாகும்.

3) 'பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'

பெரியோர் என்று சிலரைக் கருதிப் பாராட்டுதலும் வேண்டா; சிறியோர் என்று சிலரைப் பழித்தலும் வேண்டா. வாழ்க, ஒழிக-இவற்றைத் தவிர்க்கவும்.

திருப்பதி பிரிண்டர்ஸ் ○ மதுரை-1.